மதுவரித் திணைக்களம் இலங்கை

# அனுமதிபெற்ற மதுபான உற்பத்திச் சாலைகள் தொடர்பாக மதுவரித் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்துவதிலுள்ள வினைத்திறனை மதிப்பீடு செய்தல்



**PUR/E/EXD/2019/PA/01**

**உள்ளடக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | நிறைவேற்றுப் பொழிப்பு | 69 |
| 2. | அறிமுகம் | 73 |
| 2.1 | பின்னணி | 75 |
| 2.2 | கணக்காய்விற்கான அதிகாரம் | 76 |
| 2.3 | தலைப்பினை தெரிவு செய்வதற்கான காரணம் | 76 |
| 2.4 | கணக்காய்வு அணுகுமுறை | 77 |
| 2.5 | கணக்காய்வு குறிக்கோள்களும் வரையறைகளும் | 78 |
| 2.6 | கணக்காய்வு வரையறைகள் | 78 |
| 2.6.1 | உப குறிக்கோள்களும் வரையறைகளும் | 78 |
| 2.7 | கணக்காய்வு நோக்கெல்லை | 79 |
| 2.8 | கணக்காய்வு நோக்கெல்லையின் மட்டுப்பாடுகள் | 80 |
| 3. | அவதானிப்புக்கள் | 80 |
| 3.1 | நிறுவகப் பின்னணியும் ஆயத்தமும் | 80 |
| 3.1.1 | மதுபான உற்பத்தி தொடர்பான சட்ட ஏற்பாடுகள் | 80 |
| 3.1.2 | மதுபானம் சம்பந்தமான தேசிய கொள்கை | 83 |
| 3.1.3 | மதுவரித் திணைக்களத்தின் தாபனக் கட்டமைப்பு | 84 |
| 3.1.4 | மனித வளங்கள் முகாமைத்துவம் | 84 |
| 3.2 | மதுபான உற்பத்தியை ஒழுங்குபடுத்தும் நிறுவனரீதியான கடமைகள் | 85 |
| 3.2.1 | பதிவு செய்தல் | 85 |
| 3.2.2 | பொறுப்புக்களை ஒப்படைத்தலை ஒழுங்குபடுத்துதலும் பின்தொடர் நடவடிக்கையும் | 85 |
| 3.3 | உற்பத்தி நிறுவனங்கள் சம்பந்தமான ஒழுங்குபடுத்தல் செயற்பாடு | 88 |
| 3.3.1 | மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளல் | 88 |
| 3.3.2 | ஸ்பிரிட் இறக்குமதி செய்தல் | 89 |

| | | |
|---|---|---|
| 3.3.3 | உள்நாட்டு ஸ்பிரிட்களின் பயன்பாடு | 93 |
| 3.3.4 | உற்பத்தி | 96 |
| 3.3.5 | உற்பத்தி நியமம் | 102 |
| 3.3.6 | பகிர்ந்தளித்தல் | 106 |
| 3.3.7 | ஏடுகள் மற்றும் கணக்கு கூற்றுக்களைப் பேணுதல் | 110 |
| 3.3.8 | களஞ்சியப்படுத்தல் | 112 |
| 3.3.9 | மேற்பார்வையும் திடீர் சுற்றிவளைப்புக்களும் | 115 |
| 3.3.10 | சட்ட விரோதமான போதைப் பொருட்கள் (மது) தொடர்பாக அறிக்கையிடுதல் | 115 |
| 3.4 | உற்பத்தியினூடாக ஏற்படுகின்ற சமூக பொருளாதார தாக்கங்கள் | 116 |
| 3.4.1 | சுகாதார ரீதியான சிக்கல்கள் | 116 |
| 3.4.2 | குடும்ப அமைப்புக்களில் சிக்கல்கள் | 117 |
| 3.4.3 | அரசாங்க வருமானம் மீதான தாக்கம் | 117 |
| 3.4.4 | சட்டவிரோத சுற்றாடல் | 117 |
| 3.4.5 | சுற்றாடல் தாக்கம் | 118 |
| 4. | சிபார்சுகள் | 119 |

**அனுமதிபெற்ற மதுபான உற்பத்திச் சாலைகள் தொடர்பாக மதுவரித் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்துவதிலுள்ள வினைத்திறனை மதிப்பீடு செய்தல்**

---

**1. நிறைவேற்றுப் பொழிப்பு**

1913 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட மதுவரித் திணைக்களம் இலங்கை சட்ட விதிக் கோவையின் 52 ஆம் அத்தியாயமான 1912 இன் 8 ஆம் இலக்க மதுவரிக் கட்டளைச்சட்டத்தை அமுல்படுத்துவதுடன் அதற்கு மேலதிகமாக பல்வேறு திருத்தச் சட்டங்களின் மூலம் திருத்திய ஒழுங்கு விதிகளையும் அமுல்படுத்துகின்றது. தற்பொழுது அரசாங்கத்தின் வரி வருமானத்தை முகாமைத்துவம் செய்கின்ற நிறுவனங்களுக்கு மத்தியில் மூன்றாம் இடத்தை மதுவரித் திணைக்களம் வகிக்கின்றது. திணைக்களத்தினால் மதுவரியுடன் உற்பத்தி வரிக்கான தாமதக் கட்டணம், ஸ்பிரீட்டினை எடுத்துச் செல்லும் போது அறவிடப்படுகின்ற வரி, அனுமதிப்பத்திரக் கட்டணம், அனுமதிப்பத்திரத்தினை புதுப்பித்தல் கட்டணம் முதலிய வருமானங்களைச் சேகரித்தல் மேற்கொள்ளப்படுகின்றன. மதுவரித் திணைக்களத்தின் முழுமையான மேற்பார்வையின் கீழ் மதுபான உற்பத்திச் சாலைகள், குதம், கள்ளுத் தவறணைகள், வினாகிரி உற்பத்திச் சாலைகள் என்பன செயற்படுகின்றன. தற்பொழுது 23 மதுபான உற்பத்திச் சாலைகள், 14 வடிசாலைகள், 8 குதங்கள் செயற்படுகின்றன. வடிசாலைகளினூடாக ஸ்பிரிட்கள் மதுபான உற்பத்திச் சாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக மதுபான உற்பத்திச் சாலைகளால் ஸ்பிரிட் இறக்குமதி செய்தலும் இடம்பெறுகின்றது.

திணைக்களத்தின் இடமாற்றல் கொள்கையினை அமுல்படுத்தும் போது 23 மதுபான உற்பத்திச் சாலைகளுக்கு மத்தியில் அரசாங்க வருமானத்திற்கு மிகவும் குறைந்த பங்களிப்பினை வழங்குகின்ற 6 உற்பத்திச் சாலைகள் அதிக விருப்பத்திற்குரிவையாக இனங்காணப்பட்டிருந்தமை, அந்த உற்பத்திச் சாலைகளில் சேவையில் ஈடுபடுவதற்கு அதிக அளவான உத்தியோகத்தர்கள் விருப்பத்தினைத் தெரிவித்திருந்தமை அவற்றின் தொழில்நுட்பக் குற்றங்கள் அறிக்கையிடப்பட்டிருக்காமை, அந்த 6 நிறுவனங்களை ஒழுங்குபடுத்துகின்ற பிரதான அதிகாரி மதுவரித் திணைக்களமாக இருத்தல் முதலிய விடயங்கள் இத்தலைப்பினைத் தெரிவு செய்வதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டன.

உள்நாட்டு வடிசாலைகளிலிருந்து அல்லது இறக்குமதி செய்வதன் மூலம் உற்பத்திச் சாலைகளுக்கு ஸ்பிரீட் கிடைப்பதுடன் அந்த ஸ்பிரீட் கிடைப்பது தொடர்பான தகவல்கள் உற்பத்திச் சாலைகளினால் பேணப்படுகின்ற ஸ்பிரீட் பெறுவனவு பதிவேட்டில் (டீ-33) உள்ளடக்கப்படுகின்றன. இதன்போது ஸ்பிரிட்களை எடுத்துச் செல்வதற்காகவும்

அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் எடுத்துச் செல்லப்படுகின்ற ஒரு லீற்றருக்கு ரூபா 10 கட்டணம் அறவிடப்படுகின்றது. உற்பத்திச் சாலைகளுக்கு கிடைக்கின்ற இந்த ஸ்பிரிட்கள் உரிய பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு பீப்பாய்க்கு (VAT) வழங்குதல் இடம்பெறுகின்றது. இதில் ஒவ்வொரு பீப்பாய்க்கும் ஸ்பிரிட்களை வழங்குதல் தொடர்பான தகவல்கள் மற்றும் உற்பத்திக்காக ஸ்பிரீட்களை ஈடுபடுத்துதல் தொடர்பான தகவல்கள் உற்பத்தி செயற்பாடு தொடர்பான பதிவேட்டிற்கு (டீ-7) உள்ளடக்குதல் இடம்பெறுகின்றது. ஒவ்வொரு பீப்பாய்க்கும் வழங்குகின்ற அளவு மற்றும் மாற்றம் செய்தல் தொடர்பாக டீ-8 பதிவேட்டில் உள்ளடக்குதலும் இடம்பெறுகின்றது. மாத இறுதியில் இந்த (டீ-8) பதிவேட்டின் மொத்தம் வழங்கல் பதிவேட்டிற்கு (டீ-9) உள்ளடக்குதல் இடம்பெறுகின்றது. அதற்கிணங்க வடிசாலைக்குள் ஸ்பிரிட் உற்பத்தி, போக்குவரத்து, உற்பத்திச் சாலைக்கு கிடைத்தல், உற்பத்திச் சாலைக்குள் ஸ்பிரிட்டை களஞ்சியப்படுத்தல், உற்பத்திக்காக ஸ்பிரிட்டினை வழங்குதல், மதுபானங்களை உற்பத்தி செய்தல், சந்தைக்கு வழங்குதல் என்பன தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் சுங்கவரி உத்தியோகத்தர்களின் முழுமையான மேற்பார்வையின் கீழ் இடம்பெறுகின்றன. இதன்போது ஒவ்வொரு பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிருந்த தரவுகளை செம்மைப்படுத்தலும் செய்யப்படுதல் வேண்டும். 6 உற்பத்திச் சாலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது அந்த பதிவேடுகளுக்கிடையேயான செம்மையாக்கப்படாத சந்தர்ப்பங்கள் பல அவதானிக்கப்பட்டதனால் இது தொடர்பாக மதுவரி உத்தியோகத்தர்களின் மேற்பார்வை இடம்பெற்றிருக்கவில்லை என்பது அதவானிக்கப்பட்டது. அதாவது பல உற்பத்திச் சாலைகளின் ஏடுகளிலுள்ள தகவல்கள் அழிக்கப்பட்டிருந்தல், டிப்பெக்ஸ் செய்யப்பட்டிருத்தல், வெட்டப்பட்டிருத்தல் ஆகியவை இடம்பெற்றிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்ட ஸ்பிரிட்களின் அளவுடன் ஒப்பிடுகையில் சாராயம் உற்பத்தி செய்தல் அறிவிக்கப்பட்டிருக்காமை, பீப்பாய்களுக்கு மாற்றுதல் இடம்பெறும் போது மாற்றப்பட்ட அளவு மற்றும் மாற்றப்பட்ட பீப்பாய்களுக்கு கிடைக்கின்ற அளவு தொடர்பாக முக்கியமான வித்தியாசங்கள் காணப்பட்டமை, ஸ்பிரிட்களைளஎடுத்துச் செல்லும் அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிட்ட அளவுக்கும் ஏடுகளில் பதியப்பட்ட அளவுக்குமிடையே முரண்பாடுகள் காணப்பட்டமை முதலிய இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டதனால் மதுவரி உத்தியோகத்தர்களின் ஒழுங்குபடுத்துதல் இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பாக சிக்கல்கள் காணப்பட்டது.

இலங்கையில் மதுபான பாவனை மிகவும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டதன் காரணமாக அரசாங்க வருமானத்திற்கு குறிப்பிடத்தக்க அளவான பங்களிப்பு அதன் மூலம் கிடைக்கின்றது என்பது புள்ளி விபரங்களின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மதுபான பாவனையினாலான பக்க விளைவுகளுக்கான பரிகாரங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற மறைமுக கிரயம் அதற்கு மிகையாக உயர்ந்த பெறுமதியினைக் கொண்டுள்ளது என பல்வேறு ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பது அறிக்கையிடப்பட்டுள்ளது.

ஸ்பிரிட்டினைப் பயன்படுத்தி பாவனைக்காக உற்பத்தி செய்யப்படுகின்ற மதுபான வகைகளை சந்தைகளுக்கு அனுப்புவதற்கு முன்னர் உற்பத்தியாளர்களால் பல்வேறு நிறமான அம்சங்களை ஈடுபடுத்துதல் மற்றும் ருசியான அம்சங்களை ஈடுபடுத்துதல் இடம்பெறுகின்றன. இந்த அனைத்து நடவடிக்கைகளையும் மதுவரிக் கட்டளைகளின் பிரகாரம் உற்பத்தியாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது தொடர்பாக ஆராய்ந்து பார்க்கும் பொறுப்பு சுங்கவரி உத்தியோகத்தர்களுடையதாகும். ஒவ்வொரு வகையான மதுபான உற்பத்தியின்போதும் அங்கீகரித்த நியமங்களின் கீழ் கடினத் தன்மையின் அளவின் பிரகாரம் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானவை எனவும் ஆராய்ந்து பார்த்தலானது சுங்க வரி உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும். வெவ்வேறாக பீப்பாய்களிலிருந்து சுத்திகரிப்பு மேற்கொள்ளும் போது மாதிரிகளைப் பெற்று அவற்றை அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பி பகுப்பாய்வு அறிக்கையினைப் பெற்றுக்கொண்டு அவை நிர்ணயிக்கப்பட்ட நியமங்களின் பிரகாரம் காணப்படுகின்றது என்பதனைப் பரீட்சித்தல் இடம்பெறுகின்றது. கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 8 வடிசாலைகள் / உற்பத்திச் சாலைகள் சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட தவணைகளின் போது அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை, பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகளை தாமதித்து இரசாயனப் பகுப்பாய்வாளர்களுக்கு அனுப்பி வைத்தல், இராயப் பகுப்பாய்வாளரின் அறிக்கையில் குறிப்பிட்ட கடினத்தன்மையின் அளவுக்கும் பதிவேட்டில் குறிப்பிட்ட கடினத் தன்மையின் அளவிற்குமிடையே வித்தியாசம் காணப்படுதல் முதலிய விடயங்கள் அவதானிக்கப்பட்டதனால் மதுவரி உத்தியோகத்தர்களின் பொறுப்பு நிறைவேற்றப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படவில்லை.

மதுவரி அறிவித்தல்கள் மற்றும் கட்டளைகளை மீறுதல் இடம்பெற்றுள்ள சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டதனால் இது தொடர்பாக மதுவரி உத்தியோகத்தர்களின் மேற்பார்வை இடம்பெற்றுள்ளது என்பது அவதானிக்கப்படவில்லை. மேலும், மதுவரி அதிகாரிகளாலும் உதவி மதுவரி ஆணையாளராலும் போதியளவு மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டன என்பதுவும் அவதானிக்கப்படவில்லை.

மேலும், சுங்கவரி ஒழுங்குபடுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கின்ற பொறுப்புமிக்க அதிகாரிகளின் அலட்சியத்தின் காரணமாக சட்ட விரோதமாக உள்நாட்டில் தயாரிக்கப்படுகின்ற, மதுவரி மற்றும் சுங்கவரி செலுத்தாது இறக்குமதி செய்யப்படுகின்ற ஸ்பிரிட்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற மதுபானங்கள் சிறிய அளவில் சந்தையில் ஊசலாடுகின்றது என முன்னைய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் விசாரணை மற்றும் சுங்க விசாரணைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. அதன் மூலம் இடம்பெற்றுள்ள சமூகப் பாதிப்புக்களையும் அரசாங்க வருமானம் இழக்கபடுவதனையும் குறைத்தல் பொறுப்பு மிக்க அதிகாரத்தைக் கொண்ட நிறுவனங்களின் அடிப்படை பொறுப்பாக இருந்த போதிலும், இக்கணக்காய்வின் மூலம் அவதானிக்கப்படுகின்ற விடயங்களின் காரணமாக அப்பொறுப்பினை நிறைவேற்றுதல் பிரச்சினைக்குரிய விடயமாக அவதானிக்கப்பட்டது.

போக்குவரத்துச் செய்வதற்காக அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல், ஸ்பிரிட்டினைத் தயாரித்தல், மதுபான உற்பத்திக்கான ஸ்பிரிட்களை உற்பத்திச் சாலையிலுள்ள ஸ்பிரிட் பெறுவனவு பதிவேட்டில் உள்ளடக்குதல் மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக அவற்றினை வழங்கும் வரையான நடைமுறை தொடர்பாக சுங்கவரி உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்துவதற்காக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறே லேபல், மூடி, போத்தல் என்பவற்றை பயன்படுத்துதல் பற்றியும் அதேபோல் உற்பத்தி செய்யப்பட்ட அம்மூலப்பொருட்களுடன் உள்ள தொடர்புகள் பற்றியும் பகுப்பாய்வு செய்தல், திணைக்களத்திற்குள் ஆய்வுகூடத்தினை தோற்றுவிப்பதன் மூலம் பகுப்பாய்வு நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்குத் தேவையான முயற்சிகளை எடுத்தல், திணைக்களத்தின் பணிப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான முயற்சி எடுத்தல், மீறுதல்கள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டணங்களை நிர்ணயித்தல், சட்டவிரோதமான மதுபான பாவனையின் காரணமாக சுகாதாரம் தொடர்பான பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்காக குற்ற திடீர் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டு கூடுதல் சட்ட நடவடிக்கைகளை எடுத்தல், உற்பத்திச் சாலைகளிலிருந்து அறவிட வேண்டிய அரசாங்க வரி வருமானத்தைப் பாதுகாப்பதற்காக உத்தியோகத்தர்களால் தலைமை வகித்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருத்தல், பகுப்பாய்வு அறிக்கையினை தாமதமின்றி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் முதலிய பரிகாரங்கள் இவ்வறிக்கையின் மூலம் சிபார்சு செய்யப்படுகின்றது.

## 2. அறிமுகம்

---------------

இலங்கை மதுவரித் திணைக்களம் 1913 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டதுடன் அரசாங்க வரி வருமானத்தை முகாமைத்துவம் செய்கின்ற பிரதான நிறுவனங்களுக்கு மத்தியில் அது மூன்றாம் இடத்தினை வகிக்கின்றது. இலங்கை மதுவரித் திணைக்களத்தினால் இலங்கை சட்ட விதிக்கோவையின் 52 ஆம் அத்தியாயமான 1912 இன் 8 ஆம் இலக்க சுங்க வரி கட்டளைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. பல்வேறு திருத்தச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டதான 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச்சட்டமும் நஞ்சு வகைகள் மற்றும் அபின் ஆபத்தான மருந்துகள் கட்டளைச்சட்டமும், 2006 இன் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் கீழுள்ள ஒழுங்கு விதிகளும் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் மதுபானம் மற்றும் புகையிலைகள் கைத்தொழிலின் செயற்திறனான கட்டுப்பாட்டின் மூலம் அரசாங்க வருமானத்தை சேகரித்தலும் அக்கைத்தொழிலில் இடம்பெறக்கூடிய சட்டரீதியற்ற உற்பத்திகளைத் தடுப்பதன் மூலம் இலங்கையின் அபிவிருத்திக்கும் சமூக நலன்புரிக்கும் பங்களிப்புச் செய்வதும் நஞ்சு விசம், அபின் மற்றும் ஆபத்தான மருந்துகள் கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சமூக பாதுகாப்பை வழங்குவதும் திணைக்களத்தின் செயற்பணியாகும்.

இலங்கை சுங்க வரித் திணைக்களம் தனது செயற்பணியை அடைந்து கொள்ளும் வகையில் பின்வரும் குறிக்கோள்களை முன்னிலைப்படுத்தி நடவடிக்கை எடுத்து வருகின்றது.

(அ) மதுபானம் மற்றும் புகையிலைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தை பாதுகாத்தல்

(ஆ) மதுவரிக் கட்டளைச்சட்டம் மற்றும் புகையிலை வரி கட்டளைச் சட்டத்தை நிறைவேற்றுதல்.

(இ) நஞ்சு, விசம், அபின் மற்றும் ஆபத்தான மருந்துகள் கட்டளைச் சட்டத்தை அமுல்படுத்துதல்.

(ஈ) புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை கட்டளைச் சட்டத்தை அமுல்படுத்துதல்.

மேற்கூறிய குறிக்கோள்களை முதன்மைப்படுத்தும் வகையில் இலங்கை மதுவரித் திணைக்களம் பின்வரும் நடவடிக்கைகளில் ஈடுபடும்.

(அ) மதுவரி வருமானத்தை சேகரித்தல்.

(ஆ) மதுபான உற்பத்திச் சாலைகளுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

(இ) கள்ளுத் தவறணைகள், வடிசாலைகள், வினாகிரி உற்பத்திச் சாலைகள், போத்தலில் அடைத்தல் நிலையங்கள் என்பவற்றிற்குத் தேவையான கள்ளு பெற்றுக் கொள்ளும் வகையில் கள்ளு சீவுதல் மற்றும் எடுத்துச் செல்லல் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

(ஈ) வடிசாலைகள், குதங்கள், மதுபான உற்பத்திச் சாலைகள் என்பவற்றை கட டுப்படுத்துதலும் மேற்பார்வை செய்தலும்

(உ) அனுமதிப்பத்திரம் பெற்ற நிலையங்களை மேற்பார்வை செய்தலும் கட்டுப்படுத்தலும்

(ஊ) பிரதேச செயலாளர்களுக்கு கள்ளுத் தவறணைகள், வெளிநாட்டு குடியான தவறணைகளை வருடாந்தம் ஏலத்தில் விடும் வகையில் தேவையான ஆகக் குறைந்த மதிப்பீட்டு விலைகளை வழங்குதல்.

(எ) அனுமதிப்பத்திரக்காரர்களால் செய்யப்படுகின்ற தவறுகளை மதுவரிக்கட்டளைச் சட்டத்தில் குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் இணக்கப்பாட்டிற்கு கொண்டு வருதல்.

(ஏ) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரமின்றி மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து சட்ட விரோத நடவடிக்கைகளை விசாரணை செய்து குற்றவாளிகளை நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.

(ஐ) நஞ்சு, விசம், அபின் மற்றும் ஆபத்தான மருந்துகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் இடம்பெறுகின்ற அனைத்து சட்டவிரோத நடவடிக்கைகளையும் விசாரணை செய்து குற்றவாளிகளை நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.

(ஒ) புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்ற அங்கீகரித்த உற்பத்திகளை மேற்பார்வை செய்தலும் புகையிலை வரி வருமானத்தை சேகரித்தலும் பாதுகாத்தலும்

## 2.1 பின்னணி

--------------

இலங்கை மதுவரித் திணைக்களமானது மதுவரி ஆணையாளர் நாயகத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்றது. மதுவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் நிருவாகத்திற்காக மாகாண அடிப்படையின் கீழ் மதுவரி பிரிவுகளுக்கு பகிரப்பட்டுள்ளதுடன் மேல் மாகாணம் 3 பிரிவுகளுக்கும் வடமேல் மாகாணம் 2 பிரிவுகளுக்கும் மாவட்ட அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இம்மதுவரிப் பிரிவானது உதவி மதுவரி ஆணையாளரால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. மதுவரிப் பிரிவின் கீழ் மதுவரி அத்தியட்சகர் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் மதுவரி அத்தியட்சகர் அலுவலகத்தின் கீழ் மதுவரிநிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. திணைக்களத்தினால் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட மதுவரி அதிகாரப் பிரதேசத்தின் கீழ் அவை நிருவிக்கப்படுகின்றன. இம்மதுவரி நிலையத்திற்காக பரிசோதகர் தரத்திற்கும் ஏனைய பதவிகளுக்குமுரிய உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அந்த உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் பரிசோதகர் தரத்தைச் சேர்ந்த சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மதுவரி நிலையப் பொறுப்பாளராகச் செயற்படுவார்கள். இலங்கை மதுவரித் திணைக்களமானது தலைமை அலுவலகத்தினாலும் நாடு முழுவதிலும் அமைந்துள்ள 13 உதவி மதுவரி ஆணையாளர் அலுவலகங்களினாலும் 30 மதுவரி அத்தியட்சகர் அலுவலகங்களினாலும், 56 மதுவரி நிலையங்களினாலும் 5 விசேட செயற்பாட்டுப் பிரிவினாலும் தனது செயற்பணியை நிறைவேற்றுகின்றது.

மதுவரித் திணைக்களத்தினால் மதுவரி தொடர்புபட்ட மதுபான உற்பத்தி வரி, மதுபான உற்பத்தி வரிக்கான தாமதக் கட்டணம், விண்ணப்ப பத்திரக் கட்டணம், அனுமதிப்பத்திரத்தினைப் புதுப்பித்தல், அனுமதிப்பத்திரத்தினை ஒப்படைத்தல் கட்டணம், பெயர்களை மாற்றம் செய்தல், கள்ளு சேகரிப்பு நிலையக் கட்டணம் முதலிய கட்டணங்களைச் சேகரித்தல் இடம்பெற்று வருகின்றது. இதற்கு மேலதிகமாக புகையிலை வரியும் சேகரிக்கப்படுகின்றது.

மதுவரித் திணைக்களத்தின் முழுமையான மேற்பார்வையின் கீழ் மதுபான உற்பத்திச்சாலைகள், குதங்கள், கள்ளுத்தவறணைகள், வினாகிரி உற்பத்திச்சாலைகள் என்பன செயற்படுகின்றன. மதுபான உற்பத்திச்சாலைக்குள் உள்நாட்டு மதுபானங்கள் (சாராயம்), உள்நாட்டு ரீதியாக உற்பத்தி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்கள்,

வயின், சக்கை போத்தல் கள்ளு, பியர் முதலியன உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் சாராயம், வெளிநாட்டு மதுபானம் என்பன கடினமான மதுபானங்களாகவும் கள்ளு வயின், சக்கை, பியர் என்பன மென் பானங்களாகவும் கருதப்படுகின்றன.

வடிசாலையில் எதயில் ஸ்பிரிட், விஸ்டொம் ஸ்பிரிட், தென்னை ஸ்பிரிட், பனை ஸ்பிரிட் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன. தென்னங்கள்ளு, பனங் கள்ளு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தென்னை மற்றும் பனை ஸ்பிரிட்கள் வடிக்கப்படுவதுடன் சீனி உற்பத்தியின் உபபெறுபேறான மொலேசஸ்களிலிருந்து செவனகல மற்றும் பெலவத்த வடிசாலையில் விஸ்டொம் ஸ்பிரிட் தயாரிக்கப்படுகின்றன. மேலும், இறுங்கு மாவினைப் பயன்படுத்தி சக்கை தயாரிப்பதின் உப விளைவினை அடிப்படையாகக் கொண்டு விஸ்டொம் ஸ்பிரிட் உற்பத்தி செய்யப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக மதுபானங்களை உற்பத்தி செய்வதற்கும் கைத்தொழில் உற்பத்திக்கும் எதயில் ஸ்பிரிட் இறக்குமதி செய்தலும் இடம்பெறுகின்றது.

தற்பொழுது இலங்கையில் 23 மதுபான உற்பத்தி சாலைகளும் 14 வடிசாலைகளும் 8 குதங்களும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. மதுவரி ஆணையாளர் நாயகம் மற்றும் பிரதி மதுவரி ஆணையாளரின் (வருமானங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்கள்) மேற்பார்வையின் கீழ் அனுமதிப்பத்திரப் பிரிவில் மதுபான வரி வருமானம் கணிப்பீடு செய்வதும் அது தொடர்பான கணனி தரவுகளை செயற்படுத்துவதும் மற்றும் மதுபான உற்பத்திச் சாலைகள், குதங்கள், மற்றும் வடிசாலைகளுக்குரிய அறிக்கைகள், தரவுகள் பதிவேடுகளைப் பேணுதலும் இடம்பெறுகின்றது.

## 2.2 கணக்காய்விற்கான அதிகாரம்

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

## 2.3 தலைப்பினை தெரிவு செய்வதற்கான காரணம்

---

23 உற்பத்தி சாலைகளுக்கு மத்தியில் அரசாங்க வருமானத்திற்கு மிகவும் குறைந்த பங்களிப்பினை வழங்குகின்ற 6 உற்பத்தி சாலைக் கம்பனிக்குள் தோற்றுவிக்கப்பட்டுள்ள மதுவரி அலுவலகங்கள் இத்திணைக்களத்தின் இடமாற்றல் கொள்கையின் பிரகாரம் மிகவும் விருப்பமான இடங்களாக இனங்காணப்பட்டிருந்தன.

மேலும், அவற்றில் சேவையில் ஈடுபடுவதற்கு உத்தியோகத்தர்கள் அதிக விருப்பத்தைக் காட்டியிருந்தார்கள் என்பது இடமாற்றங்களுக்காக கிடைத்த வேண்டதல்களினைப் பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அந்த உற்பத்திச் சாலைக் கம்பனிகள் சம்பந்தமாக பல சிக்கலான நிலைமை அறிவிக்கப்பட்டிருந்தமையும் ஏனைய உற்பத்திச்சாலைகளுடன் ஒப்பீடு செய்த போது இந்த உற்பத்திச் சாலைகளின் பலவீனங்கள் தொடர்பாக மதுவரி உத்தியோகத்தர்களிடமிருந்து போதியளவு குறைபாடுகள் அறிவிக்கப்பட்டிருக்காமையும் அந்த உற்பத்திச் சாலையை ஒழுங்குபடுத்தும் பிரதான அதிகாரியும் மதுவரி திணைக்களத்தைச் சேர்ந்தவராகயிருப்பதும் ஆகிய விடயங்கள் இத்தலைப்பினைத் தெரிவு செய்வதற்கு அடிப்படையாக இருந்தது.

## 2.4 கணக்காய்வு அணுகுமுறை

---

கணக்காய்வினால் சிபார்சு செய்யப்பட்டுள்ள தொடக்க பரிசீலனைகள்

(அ) உற்பத்திச்சாலைகள், வடிசாலைகள் மற்றும் குதங்களின் பௌதீக பரிசோதனை.

(ஆ) உற்பத்திச்சாலைகள், வடிசாலைகளில் பேணப்படுகின்ற கணக்குகளைப் பரீட்சித்தல்.

(இ) தலைமை அலுவலகத்தில் உள்ள அனுமதிப்பத்திர கோவைகளையும் அறிக்கைகளையும் பரீட்சித்தல்

(ஈ) இறக்குமதி செய்தல் சம்பந்தமாக சுங்கப் பிரிவிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்.

(உ) ஸ்பிரிட் இறக்குமதி சம்பந்தமாக இறக்குமதி ஏற்றுமதி திணைக்களத்திடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல்.

(ஊ) உற்பத்தியாளர்கள் சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட நியமங்களின் பிரகாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்ற இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளுதல்.

(எ) கழிவுப்பொருட்களை வெளியேற்றுவது தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதனைப் பரீட்சித்தல்.

## 2.5 கணக்காய்வு குறிக்கோள்களும் வரையறைகளும்

52 ஆம் அத்தியாயமான மதுவரிக்கட்டளைச்சட்டத்தின் 25 ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 2 ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மதுவரி கட்டளைச்சட்டத்தின் 32 ஆவது பிரிவின் கீழ் அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட சட்ட விதிகளின் பிரகாரம் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதற்கிணங்க 844 மற்றும் 902 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்கள், வழிகாட்டிகள் மற்றும் திணைக்களத்தின் நிபுணத்துவ கட்டளைகள் என்பன தொடர்புபடுத்தப்படுதல் வேண்டும். உற்பத்திச்சாலைகள், வடிசாலைகள், குதங்கள் என்பன சம்பந்தமாக மேலே குறிப்பிட்ட மதுவரி அறிவித்தல்களின் ஆலோசனைகள் மற்றும் திணைக்களத்தின் நிபுணத்துவ கட்டளைகள் மீறப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக திணைக்களத்தினால் முறையான மேற்பார்வையும் ஒழுங்குபடுத்துதலும் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பாக பரீட்சித்தல் இக்கணக்காய்வின் குறிக்கோளாகும்.

## 2.6 கணக்காய்வு வரையறைகள்

### 2.6.1 உப குறிக்கோள்களும் வரையறைகளும்

| | உப குறிக்கோள்கள் | வரையறைகள் |
|---|---|---|
| (i) | மனித பாவனைக்குப் பொருத்தமான மதுபானங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றனவா என்பது | திணைக்களத்தின் நிபுணத்துவ கட்டளைகளும் நியமங்களும் |
| (ii) | திணைக்களத்தினால் ஒழுங்குபடுத்தல் இடம்பெறுகின்றனவா என்பது | மதுவரி அறிவித்தல் அதிகாரச்சட்டம், சுற்றறிக்கை திணைக்கள கட்டளை, நிபுணத்துவ கட்டளை |
| (iii) | 844 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் ஆலோசனை | உற்பத்திச்சாலை / வடிசாலைகளை ஸ்தாபிப்பதற்கும் பேணுவதற்கு |

| | | |
|---|---|---|
| | பின்பற்றப்படுகின்றனவா என்பது | நிபந்தனைகள் |
| (iv) | திணைக்களத்தின் நிபுணத்துவ கட்டளை பின்பற்றப்பட்டுள்ளனவா என்பது | நிபுணத்துவ கட்டளையை அமுல்படுத்தும் நடைமுறை |
| (v) | உள்ளகக் கட்டுப்பாடு | பேணப்பட்டுள்ள கட்டுப்பாட்டு நடைமுறை |
| (vi) | வரியை கணித்தல் சரியாக இடம்பெறுகின்றனவா | மதுவரி அறிவித்தல்களுடன் இணங்கியிருத்தல். |

## 2.7 கணக்காய்வின் நோக்கெல்லை

---------------------------------------------------

2.7.1 இக்கணக்காய்வானது கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான உச்ச நிறுவனங்களின் சர்வதேச நிறுவனத்தினால் (இன்டொசாய்) வழங்கப்பட்ட வழிகாட்டிகள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 15 ஆவது உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது. எங்களின் கணக்காய்வின் அவதானிப்புக்கள் மற்றும் சிபார்சுகளின் அடிப்படையில் முடிவுரையினை மேற்கொள்வதற்காக மேலே குறிப்பிட்ட குறிக்கோள்களை எவ்வளவு தூரத்திற்கு அடைந்து கொள்ளலாம் என்பதுவும் அக்குறிக்கோள்களை அடைந்து கொள்ளல் சம்பந்தமான ஆபத்துக்கள் என்பன என்பதனையும் இனங்காண்பதற்கான ஒரு அடிப்படையாக நிறுவனம் மற்றும் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளும் உள்ளகக் கட்டப்பாட்டு முறைமைகள் தொடர்பாகவும் எங்களால் புரிந்துணர்வினைப் பெற்றுக்கொள்ளல் எதிர்பார்க்கப்பட்டது.

2.7.2 எங்களின் கணக்காய்வுச் செயற்பாடுகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ள கணக்காய்வுத் திட்டத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. கணக்காய்விற்காகப் பேணப்படுகின்ற காலவேளை மற்றும் மனித வளங்களின் அடிப்படையில் இக்காணக்காய்வின் அளவானது தெரிவு நடைமுறைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

2.7.3 மேல் மாகாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உற்பத்திச்சாலைகள், வடிசாலைகள் மற்றும் குதங்களின் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சித்தலினைப் போல மதுவரித் திணைக்களத்தின் இடமாற்ற நடைமுறையில் அதிக விருப்பமான இடமாக அடையாளம்

காணப்பட்டுள்ள நிறுவனங்களிலிருந்து கிடைக்கின்ற மதுவரி வருமானம் மொத்த மதுவரி வருமாத்தில் மிகவும் சிறிய சதவீதமாகக் காணப்படுதல் மற்றும் அதற்கு தாக்கமளித்த காரணங்களை பரீட்சிப்பதற்கு இப்புலனாய்வு மட்டுப்படுத்தப்படுகின்றது.

## 2.8 கணக்காய்வு நோக்கெல்லையின் மட்டுப்பாடுகள்

---

மதுபான உற்பத்திச் சாலைகள் அனைத்தும் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் காரணமாக மூன்றாம் தரப்பினர்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் போது சிக்கல்களுக்கு உட்படுதல், விசேடமாக கம்பனிகளால் உற்பத்திச் சாலைகளுக்குள் உருவாக்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் தொடர்பான மற்றும் அவற்றின் களஞ்சியப்படுத்தல், சந்தைப்படுத்தல் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் சிக்கல்கள், ஸ்பிரிட் இறக்குமதி செய்வதற்குரிய சுங்கத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதிலான சிக்கல்கள் முதலிய விடயங்கள் கணக்காய்வின் நோக்கெல்லையின் மட்டுப்பாடுகள் தொடர்பாக தாக்கமளித்துள்ளது.

## 3. அவதானிப்புக்கள்

---

## 3.1 நிறுவகப் பின்னணியும் ஆயத்தமும்

---

### 3.1.1 மதுபான உற்பத்தி தொடர்பான சட்ட ஏற்பாடுகள்

---

(52 ஆம் அத்தியாயமான) சுங்கவரி கட்டளைச்சட்டத்தின் 25 ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சுங்கவரி கட்டளைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட சட்ட விதிகளின் பிரகாரம் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். அதற்கிணங்க 844 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல், வடிசாலை வழிகாட்டி, மதுவரி அறிவித்தல், 902 ஆம் இலக்க திணைக்களத்தின் தொழில்நுட்ப கட்டளை என்பன தொடர்புபடுத்தப்படுதல் வேண்டும்.

மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட உற்பத்திசாலைகள், வடிசாலைகள், குதங்கள் என்பன சம்பந்தமான மேலே குறிப்பிடப்பட்ட மதுவரி அறிவித்தல்களுக்கும் திணைக்களத்தின் தொழில்நுட்ப கட்டளைகளுக்கும் இணங்க நடவடிக்கை எடுத்திருக்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டன.

3.1.1.1 திணைக்களத்தின் தொழில்நுட்ப கட்டளையின் பிரகாரம் கணக்கேடுகளின் பிழைகளைச் சரிசெய்தல் தேவைப்படுகையில் பிழையான பதிவிற்கு மேலே மெல்லியதாக சிகப்பு கோட்டினை கீறி அக்கோட்டிற்கு மேலே சரியான பதிவினை எழுதி சரிசெய்து ஒவ்வொரு சரிசெய்தலும் செய்த உத்தியோகத்தர் குறுங்கையொப்பமிட்டு திகதியிடப்படுதல் வேண்டும். அவ்வாறே டீ7, டீ8, டீ9 ஆகிய பதிவேடுகள் சம்பந்தமாக உத்தியோகத்தர் எழுத்துமூலம் வேண்டுதல் எடுக்கப்பட்டவாறு வடிசாலை உத்தியோகத்தரினால் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியாலும் குறுங்கையொப்பமிடுதல் வேண்டும். மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் வடிசாலைகளாலும், உற்பத்திச் சாலைகளாலும் இந்த தொழில்நுட்ப கட்டளை மீறப்பட்டிருந்தன. அந்த உற்பத்திச் சாலைகளின் கணக்கேடுகளிலும் பேணப்பட்டு வந்த பதிவேடுகளிலும் டிபெக்ஸ் செய்தல் மற்றும் அழித்தல் இடம்பெற்றிருந்ததுடன் அவற்றில் குறுங்கையொப்பமும் திகதியும் இடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததன் மூலம் ஒழுங்கீனங்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்புக்கள் காணப்படுவதும் அது தொடர்பாக மேற்பார்வை உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்படாமையும் அவதானிக்கப்பட்டது.

3.1.1.2 844 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் பூட்டுக்களைப் பொருத்துவதற்காக மதுவரி ஆணையாளர் நாயகம் திருப்திப்படும் வகையில் அனைத்து தொட்டிகள், ஸ்பிரிட் கொள்கலன்கள், பீப்பாய்களுக்கு பொருத்தமான மற்றும் பாதுகாப்பான ஒன்று சேர்த்தல், வழங்கல்கள், மற்றும் பராமரித்தல் இடம்பெறுதல் வேண்டும். எனினும், ஹங்வெல்ல எக்மி உற்பத்திச் சாலையின் பீப்பாய் அறைகள் இரண்டிலும் பீப்பாய்களுக்கு பூட்டுக்கள் போடப்பட்டிருக்கவில்லை எனவும் ஒரு பீப்பாய் அறைக்குள் மதுபானம் கலவை செய்தல், தயாரித்தல் முதலிய நடவடிக்கைகள் இடம்பெறுவதனால் பீப்பாய் அறைகளை திறந்து வைக்க வேண்டி ஏற்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க மதுவரி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ஒழுங்கீனங்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்புக்கள் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

3.1.1.3 மதுவரி அறிவித்தல் 325(25) D நிபந்தனையின் பிரகாரம் தென்னை ஸ்பிரிட் சார்ந்ததாக உற்பத்தி செய்யப்படுகின்ற மதுபானங்களுக்காக ஈடுபடுத்த வேண்டிய மதுபான வீதம் 74.1 சதவீதமான உச்ச எல்லைக்கு உட்பட்டதாகும். எனினும், அந்த கடினத் தன்மையை மிகைத்து ஸ்பிரிட் வடித்தல் செய்யும் போது ரொக்லேண்ட் வடிசாலையினால் மதுவரி ஆணையாளர் நாயகத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

3.1.1.4 அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்கின்ற யாராவது ஒருவரினால் திணைக்களத்தின் சட்ட விதிகளின் பிரகாரம் ஒவ்வொரு அனுமதிப்பத்திர வகைக்கு இணங்க உறுதியாகக் காட்டப்பட்டுள்ள கட்டணமும் வரியும் செலுத்தப்படுதல் வேண்டும். சுங்கவரி கட்டளைச்சட்டத்தின் 25 ஆம் பிரிவு மற்றும் 32 ஆம் பிரிவுகளின் பிரகாரம் சட்ட விதியினை உருவாக்கும் போது அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களத்தினால் மதுவரி திணைக்களத்தின் சிபார்சு பெற்றுக்கொள்ளப் பட்டிருக்காததுடன் விலை உயர்ச்சி தொடர்பாக கவனம் செலுத்தாது கட்டணத்தை மாற்றமின்றி வைத்திருந்தமை மற்றும் குறைத்து வைத்திருந்ததன் மூலம் அரசாங்க வருமானத்திற்கு ஏற்பட்ட பாதகமான தாக்கம் தொடர்பாக கவனம் செலுத்தாதிருந்தமை கணக்காய்வின் போது சச்சரசுத் தன்மையான விடயமாகும். திணைக்களத்தினால் 2008, 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது மதுவரி அறிவித்தல் முறையே 902, 983 மற்றும் 1004 ஆம் இலக்க சட்டவிதிகளின் பிரகாரம் கட்டணத்தை நிர்ணயித்தல் தொடர்பான விபரம் பின்னிணைப்பு 01 இல் தரப்படுகின்றது.

3.1.1.5 திணைக்கள கட்டளை பகுதி I இன் IV ஆம் அத்தியாயத்தின் 2.3 ஆம் பிரிவின் ஏதாவது நடவடிக்கைக்காக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத பீப்பாய் அல்லது கொள்கலனில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள மதுபானங்களை இரண்டு வாரத்திற்கு ஒரு தடவை அளவை செய்து ஏற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டு அதன் பெறுபேறுகளை ஏற்றுக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை மற்றும் அளவுகளை வைத்திருத்தல் பதிவேட்டில் (டீ-6) பதியப்பட வேண்டிய போதிலும், ரோயல் காஸ்க் வடிசாலையில் மதுவரி உத்தியோகத்தர்களால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.1.1.6 மதுவரி அறிவித்தல் 335(25) D நிபந்தனையின் பிரகாரம் தென்னம் ஸ்பிரிட் சார்ந்த வகையில் உற்பத்தி செய்யப்படுகின்ற மதுபானங்களுக்காக உற்பத்தி செய்யப்படுகின்ற மதுபானங்களுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டிய மதுபானங்களின் வீதம் 74.1 சதவீதமான உச்ச எல்லைக்கு உட்பட்டதாகும். எனினும் அந்த மதுபானத்தின் கடினத் தன்மையை மிகைத்து 74.9 சதவீதத்திலிருந்து 79 சதவீதம் வரையான சதவீதத்தில் ஸ்பிரிட் வடிக்கப்பட்டுள்ளது என டீ.சீ.எல் புதிய குதத்திற்குரிய டீ-33 பதிவேட்டினைப் பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டது.

3.1.1.7 பொயிலத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற எதீல் மதுபானங்களின் மதுபான சதவீதத்தை பல்வேறு சந்தர்ப்பங்களின் போது தீர்தானிப்பதற்காக நியம தரமுள்ள உபகரண தொகுதி மதுவரிநிலையத்தில் இருத்தல் அத்தியாவசியமான போதிலும், ரோயல் காஸ்க் உற்பத்திச் சாலையில் அவ்வாறான உபகணரத் தொகுதி இருக்கவில்லை. மதுபானத்தின் கடினத் தன்மையின் அளவின் அடிப்படையில் மதுவரி

வருமானம் தீர்மானிக்கப்படுவதுடன் அதன் பிரகாரம் சரியான மதுவரி வருமானம் கணிக்கப்பட்டதா என்பதுவும் நியம தரமான மதுபானம் உற்பத்தி செய்தல் இடம்பெற்றுள்ளதா என்பதுவும் தொடர்பாக கணக்காய்வின் போது சச்சரவுக்கு உட்பட்டிருந்தது.

### 3.1.2 மதுபானம் சம்பந்தமான தேசிய கொள்கை

-----------------------------------------------------------------------

நாட்டில் மதுபானத்தை சட்டவிரோதமாக உற்பத்தி செய்து எடுத்துச் செல்லுதல் அதிக அளவில் இடம்பெறுகின்றது. அவற்றின் பாதிப்புக்களாக சுகாதாரம் தொடர்பாக மதுபானத்தின் காரணமாக இடம்பெறுகின்ற பாதகமான தாக்கங்களாவது மதுபானம் சம்பந்தப்பட்ட குற்றங்களின் அதிகரிப்பு மற்றும் மதுபானங்களின் மூலம் அழிவடைந்து செல்லுகின்ற மானிட, இயற்கை மற்றும் நிதி வளங்களைப் போல போதைப் பொருட்களின் கெடுதியான பாவனையின் காரணமாக இடம்பெறுகின்ற தனிப்பட்டவர் - குடும்பம் மற்றும் பல்வேறு மனித இனங்களின் அழிவு, தெரு, மட்டத்தில் மதுபானம் காணப்படுகின்ற அளவு அதிகரித்துச் செல்லல் காணப்படுதல் ஆகிய விடயங்களைக் காணக்கூடியதாக இருந்தது. மேலும், இவ்விடயங்களின் காரணமாக மதுபான சட்டங்களை அமுல்படுத்தும் முன்னணி நிறுவனமாக மதுவரித் திணைக்களம் செயற்படுவதற்கு சட்டரீதியான ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது. அதனால் மதுபானம் சம்பந்தமாக தேசிய கொள்கையைத் தயாரிக்கும் அவசியம் மிகவும் தீவிரமடைந்துள்ளதுடன் அதன் மூலம் விரிவான மட்டத்திலான மற்றும் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட உபாய மார்க்கங்களின் மூலம் வழங்கலைக் கட்டுப்படுத்துதல் மற்றும் வேண்டுதலை குறைவடையச் செய்வதற்கும் போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்தும் தந்திரோபாயங்களை அமுல்படுத்துவதில் ஈடுபட்டுள்ள அரசாங்க நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், தனியார் துறை மற்றும் ஏனைய அமைப்புக்களால் ஒவ்வொரு உபாய மார்க்கங்களின் கீழ் உறுதியான கொள்கை மற்றும் வழிகாட்டிகளின் அடிப்படையில் செயற்படும் தேவைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

அனைத்து மதுபான உற்பத்தி வகைகளையும் சந்தைப்படுத்துவதற்காக அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது பொதுமக்களின் சுகாதாரம், பாதுகாப்பு, பொதுமக்களின் அபிப்பிராயம் போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படைத் தன்மையுடன் புதிய நடைமுறையின் தேவைப்பாடும் அவதானிக்கப்பட்டது.

### 3.1.3 மதுவரித் திணைக்களத்தின் தாபனக் கட்டமைப்பு

--------------------------------------------------------------------------------

மதுவரி ஆணையாளர் நாயகத்தின் கீழ் வருமானக் கொள்கை மற்றும் நிருவாக நடவடிக்கைகளுக்காக மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம் (நிருவாக சேவை) மற்றும் வருமான செயற்பாடுகளுக்கும் சட்டங்களை அமுல்படுத்துவதற்குமாக மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகமாக இரண்டு நபர்கள் உள்ளதுடன் அம்மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகத்தின் கீழ் 4 மதுவரி ஆணையாளர்களும் மதுவரி ஆணையாளரின் கீழ் 9 பிரதி மதுவரி ஆணையாளர்களும் உள்ளனர். திணைக்களமாக்கப்பட்ட பிரதி மதுவரி ஆணையாளரின் கீழ் பிரதி மதுவரி ஆணையாளர்களும் ஏனைய உத்தியோகத்தர்களும் உள்ளனர். (விபரம் பின்னிணைப்பு - 02)

### 3.1.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

--------------------------------------------------------

(அ) 2019 யூன் 30 ஆந் திகதி வரை திணைக்களத்தின் அங்கீகரித்த பதவியணியினர் 1,492 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறான உள்ளபடியான பதவியணியினர் 1,299 ஆகவும் வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கை 193 ஆகவும் காணப்பட்டது.

(ஆ) திணைக்களத்தின் மதுவரி ஆணையார் நாயகப் பதவி 2019 மார்ச் 07 ஆந் திகதியிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதற்காக அத்திகதியிலிருந்து இன்றுவரை பதிற்கடமை நியமனம் வழங்கப்பட்டிருந்தது. பிரதான வருமானம் உழைக்கும் திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தர் பதவி நிறுவப்படாமை தொடர்பாக கணக்காய்வின் போது சிக்கலுடையதாக இருந்தது.

(இ) கணக்காய்வின் போது பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட உற்பத்திச் சாலைகளுக்கு மத்தியில் வீ.ஏ உற்பத்திச் சாலை மற்றும் அக்மி உற்பத்திச் சாலைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட மதுவரி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை ஒருவர் வீதமாகும். எவ்வாறாயினும், வீ.ஏ உற்பத்திச் சாலைகளுக்காக மதுவரி பரிசோதகர்கள் மூன்று பேர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், அந்த உற்பத்திச் சாலைகளின் மதுவரி வருமானத்திற்கான பங்களிப்பு முறையே 1.63 சதவீதத்திற்கும் 3.54 சதவீதத்திற்கும் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. (2018 ஆம் ஆண்டிற்கான மதுவரி வருமானத்திற்கு இணங்க)

## 3.2 மதுபான உற்பத்தியை ஒழுங்குபடுத்தும் நிறுவனரீதியான கடமைகள்

### 3.2.1 பதிவு செய்தல்

மதுவரி கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக் கொள்கின்ற அனைத்து வைப்பாளர்களாலும் கட்டளைச்சட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு தமது அனுமதிப்பத்திரத்தின் கால எல்லையை உள்ளடக்குவதற்காக ஒரு உடன்படிக்கையினை எழுதி கையொப்பமிடப்பட வேண்டியதுடன் தாம் வேண்டிக்கொண்ட உரிய அனுமதிப்பத்திர வகைக்காக நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள பிணையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

புதிய அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் போது உள்ளூராட்சி அதிகாரிகளினால் சான்றுப்படுத்தப்பட்ட உறுதியின் ஒரு பிரதி, விண்ணப்பதாரர் கடந்த ஆண்டுகள் காலத்தின் போது தண்டனைக் கோவையின் கீழ் குற்றவாளியாக இல்லை என்பதற்குமான நற்சாட்சிப் பத்திரமானது உரிய அதிகாரப் பிரதேசத்திற்கு அருகாமையில் உள்ள பாடசாலைகள் மத நிலையங்களுக்கான தூரத்தின் அளவைக்காட்டும் அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நில அளவைத் திட்டம், மற்றும் தொழில் முயற்சியின் பெயர் கட்டளைச் சட்டத்தின் கீழ் தொழில் முயற்சியைப் பதிவு செய்யும் சான்றிதழ் மற்றும் கம்பனி சம்பந்தப்பட்ட பெயர் பிரசித்த நொத்தாரிசின் மூலம் சான்றுப்படுத்தப்பட்டு கம்பனிகளைப் பதிவு செய்தல் சான்றிதழின் புகைப்படப் பிரதி முதலிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் மேலும், மீளளிப்புச் செய்யப்படாத விண்ணப்பக் கட்டணங்களும் செலுத்தப்படுதல் வேண்டும்.

### 3.2.2 பொறுப்புக்களை ஒப்படைத்தலை ஒழுங்குபடுத்துதலும் பின்தொடர் நடவடிக்கையும்

இலங்கையில் தோற்றுவிக்கப்பட்டுள்ள வடிசாலைகள், குதங்கள், சாராயம் உற்பத்திச் சாலைகள் தானிய மதுபானங்கள் உற்பத்திச் சாலைகள் போத்தல் கள்ளு உற்பத்திச் சாலைகள், அனுமதி பெற்ற அனைத்து நிலையங்கள் என்பவற்றை மேற்பார்வை செய்து கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் நடவடிக்கைகளுக்காக திணைக்களத்தின் உத்தியோகத்தர் இணைத்துக் கொள்ளப்படுவார். அந்த உத்தியோகத்தரினால் மது கைத்தொழிலின் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டினை ஏற்படுத்துவதன் மூலம் மதுவரி தொடர்பாக கணக்கு வைத்தல், அறிக்கையிடுதல், மதுவரியை சேகரித்தல், பொதி செய்யப்பட்ட இருப்பு செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுதல், அரசாங்கத்தின் மேற்பார்வையின் கீழான உற்பத்திகளான மதுபானங்களின்

தரக் கட்டுப்பாடு சம்பந்தமாக மேற்பார்வை செய்தலினதும் நிருவகித்தலினதும் முதலிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அந்த உத்தியோகத்தர்களால் அனைத்து மதுபான உற்பத்திச் சாலைகளில் மதுவரிக்கு உட்பட்ட அனைத்து பொருட்களுக்கும் பொறுப்பாக இருப்பதனைப் போல உற்பத்திகளுக்குரிய அனைத்து சட்டங்களையும் நாளாந்தமும் எழுமாந்தமாகவும் மேற்பார்வை செய்தலும் செய்யப்படுதல் வேண்டும். உற்பத்திச் சாலைகள் செயற்படும் நிலையில் காணப்படுகின்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் அந்த உற்பத்திச் சாலைகளுக்கு இணைத்துக் கொள்ளப்படுகின்ற மதுவரி உத்தியோகத்தர்கள் பின்வரும் கடமைகள் தொடர்பாகவும் ஒழுங்குபடுத்தல் செய்ய வேண்டும்.

(அ) மூலப்பொருள் சந்தர்ப்பம் தொடக்கம் முடிவுப் பொருள் வரையான உற்பத்தி வழங்கல் சங்கிலியில் ஒவ்வொரு மற்றும் அனைத்து சந்தர்ப்பங்களையும் மேற்பார்வை செய்தல்.

(ஆ) உற்பத்திச் சாலைகளுக்கு மூலப்பொருட்கள் அரைகுறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பொருட்கள், பூர்த்தி செய்யப்பட்ட பொருட்கள் என்பவற்றின் தரக் கட்டுப்பாட்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட தொடக்க பரிசோதனைகளை மேற்கொள்ளல், பகுப்பாய்வு அறிக்கைகளைக் கோருதல், மற்றும் அளவுகளையும் தரத்தையும் கணித்தலை மேற்பார்வை செய்தல்.

(இ) உற்பத்திச் சாலையில் அனைத்து கணக்குகளையும் ஏடுகளில் பதிவு செய்தலும் பேணுதலும் அவற்றின் தரவுகளை நாளாந்தம், மாதாந்தம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அரையாண்டுக்கு ஒரு தடவை மற்றும் வருடாந்தம் பரீட்சித்தல், பகுப்பாய்வு செய்தல் அறிக்கையிடுதல் என்பன.

(ஈ) மதுபான உற்பத்திச் சாலைகளில் நிர்ணயிக்கப்பட்ட நியம தரத்தைப் பேணுவதற்காக அவற்றின் பண்புகளைப் பரீட்சித்து அறிக்கையிடுதல்.

(உ) அரசாங்க வருமானத்தை மதுவரி ரீதியான சேகரிப்பதனை வசதியளிக்கும் வகையில் சரியாக பௌதீக இருப்புக்களைப் பேணுதல்.

(ஊ) ஒட்டுமொத்த உற்பத்தி நடைமுறைகளையும் உள்ளடக்கும் வகையில் மதுபானம் கிடைக்கின்ற, களஞ்சியப்படுத்துகின்ற, பொறுப்பேற்கின்ற, மற்றும் வழங்குகின்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவற்றினைப் பரீட்சித்தலும் மேற்பார்வை செய்தலும்,

(எ) ஒட்டுமொத்த உற்பத்தி நடைமுறைகளையும் உள்ளடக்கும் வகையில் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது மதுபான மாதிரிகளைப் பெற்றுக்கொண்டு அரசாங்கத்தின் இரசாயனப் பகுப்பாய்விற்கு அனுப்பி பகுப்பாய்வு அறிக்கையினைப் பெற்றுக்கொள்ளல்.

(ஏ) பொதுமக்களின் பாவனைக்குப் பொருத்தமான வகையிலும் மதுவரி சம்பந்தமாக உள்நாட்டு மற்றும் சர்வதேச நியமங்களுக்கு இணங்க மதுபானங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றனவா என்பதனைக் கவனித்துப் பார்த்தல்.

(ஐ) இணைந்த செயற்பாடுகளின் போது உரிய வரிக் கொடுப்பனவுகள் தொடர்பாக பதிவேடுகளைப் பேணுதல், பயணங்களுக்காக போக்குவரத்துப் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், செயற்பாடுகள் தொடர்பாக இணையத்தளமாக்கப்பட்ட தொடர்பாடல்களைப் பேணுதல், அது தொடர்பாக ஏடுகளைப் பேணுதல், அறிக்கையிடுதல் என்பன.

எனினும் மேலே குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக உற்பத்திச் சாலைகள் மற்றும் வடிசாலைகளுக்கு உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளும் போது வழமைக்கு மாற்றமான நிலைமை காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. வருமான பெறுவனவுகளுக்கு மத்தியில் 0.3 சதவீதத்திற்கும் 3.5 சதவீதத்திற்கும் இடையேயான மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட உற்பத்திச்சாலைகளுக்கும் வடிசாலைகளுக்குமாக அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினர்களை மிகைத்து ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவ்வாறான சந்தர்ப்பங்களுக்கான உதாரணங்களில் சில கீழே தரப்படுகின்றன.

| **உற்பத்திச் சாலை / வடிசாலை** | **பதவி** | **அங்கீகரித்த எண்ணிக்கை** | **உள்ளபடியான எண்ணிக்கை** |
|---|---|---|---|
| எக்மி லங்கா உற்பத்திச்சாலை | சுங்கவரி பரிசோதகர் | 01 | 03 |
| | மதுவரி சார்ஜன்ட் மேஜர் | - | 02 |
| ரோயல் காஸ்க் வடிசாலை | பிரதான மதுவரி பரிசோதகர் | - | 02 |
| மெண்டிஸ் / மொரகல்ல | மதுவரி ஒழுங்குபடுத்துனர் | 02 | 04 |

| | | | |
|---|---|---|---|
| ஏசியா பசுபிக் பிரேவரி | மதுவரி பரிசோதகர் | 01 | 02 |
| நவயால்தென்ன குதம் | மதுவரி பரிசோதகர் | 01 | 02 |

## 3.3 உற்பத்தி நிறுவனங்கள் சம்பந்தமான ஒழுங்குபடுத்தல் செயற்பாடு

### 3.3.1 மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளல்

வடிசாலைகளில் விஸ்டம் ஸ்பிரிட் உற்பத்தி செய்யப்படுவதுடன் அந்த விஸ்டம் ஸ்பிரிட்டானது தென்னை ஸ்பிரிட், பனை ஸ்பிரிட் என்பனவாக வகைப்படுத்தப்படுகின்றன. தென்னை மற்றும் பனங் கள்ளினை அடிப்படையாகக் கொண்டு தென்னை மற்றும் பனை ஸ்பிரிட்கள் வடிக்கப்படுவதுடன் சீனி உற்பத்தியின் உப விளைவான மொலேசஸ்களிலிருந்து செவனகல மற்றும் பெலவத்த வடிசாலைகளில் விஸ்டம் ஸ்பிரிட் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், இறுங்கு மாவு மற்றும் சக்கைகளின் உற்பத்தியின் உப விளைவுகளையும் அடிப்படையாகக் கொண்டு விஸ்டம் ஸ்பிரிட் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக எதயில் ஸ்பிரிட் இறக்குமதி செய்தலும் இடம்பெறுகின்றது.

மதுபான உற்பத்திக்காக ஈடுபடுத்தப்படுகின்ற மூலப்பொருட்களானது மூலப்பொருள் சந்தர்ப்பத்திலிருந்து முடிவுப் பொருள் சந்தர்ப்பம் வரையான உற்பத்திச் சங்கிலியின் அனைத்து சந்தர்ப்பங்களிலும் மதுவரி உத்தியோகத்தர்களால் மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறே உற்பத்திச் சாலைகளுக்கு / வடிசாலைகளுக்கு கிடைக்கின்ற மூலப்பொருட்கள், அரைகுறை முடிவுப்பொருட்கள் மற்றும் முடிவுப் பொருட்களின் தரக்கட்டுப்பாட்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட தொடக்க பரிசோதனைகளை மேற்கொள்வதனைப் போல பகுப்பாய்வு அறிக்கைகளைக் கோருதலும் மதுவரி உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

அனுமதிபெற்ற 23 மதுபான உற்பத்திச்சாலைகள் செயற்பட்டு வருவதுடன் இந்த உற்பத்திச் சாலைகளால் மதுபானங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஸ்பிரிட்களைப் பெற்றுக் கொள்ளுதல் சில முறைமைகளின் மூலம் இடம்பெறுகின்றன. அதாவது ஸ்பிரிட்களை இறக்குமதி செய்தல், உள்நாட்டில் கொள்வனவு செய்தல் உள்நாட்டில் உற்பத்தி செய்தல் என்பவற்றின் மூலமாகும்.

## 3.3.2 ஸ்பிரிட் இறக்குமதி செய்தல்

-----------------------------------------------

3.3.2.1 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை ஸ்பிரிட் இறக்குமதி செய்தல் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| **ஆண்டு** | **இறக்குமதி செய்யப்பட்ட ஸ்பிரிட்களின் அளவு** |
|---|---|
| | மொத்த லீற்றர் |
| 2019 | 15,295,344.0 |
| 2018 | 13,444,881.0 |
| 2017 | 18,195,430.4 |
| 2016 | 18,431,571.3 |

3.3.2.2 ஈதயில் மதுபானங்களை இறக்குமதி செய்யும் போது அனுமதிப்பத்திரதாரர்களால் செய்யப்படுகின்ற வேண்டுதல்களின் அடிப்படையில் பெயரளவில் இன்வொயிசில் குறிப்பிட்ட இருப்பின் அளவிற்காக இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது. நிர்ணயிக்கப்பட்ட இருப்பு சுங்கத்திற்கு கிடைத்ததன் பின்னர் சுங்கத்தினால் அனுமதிப்பத்திரதாரர்களுக்கு வழங்கப்படுகின்ற கடிதம் சுங்கத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் சுங்க ஏடுகளில் பதியப்பட்ட இருப்பின் அளவிற்காக சுங்கவரி அறிவித்தல் 988 இன் பிரகாரம் போக்குவரத்து வரி அறவிடப்படுகின்றது. வரி அறவிடப்பட்டதன் பின்னர் ஸ்பிரிட் இருப்புக்கள் அனுமதிப்பத்திரம் பெற்ற நிலையங்களுக்கு ஒப்படைக்கப்படும் போது மதுவரி உத்தியோகத்தர்களால் பௌதீக இருப்பு மீதி தொடர்பாக கணிப்பீடு செய்தல் இடம்பெறுகின்றது. அதன்போது போக்குவரத்துப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட அளவினை மிகைத்து கிடைத்துள்ள ஸ்பிரிட்கள் சம்பந்தமாக வரி அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு 2 இறக்குமதிக்கம்பனிகளால் கட்டளையில் குறிப்பிடப்பட்ட ஸ்பிரிட் இருப்பினை மிகைத்து மொத்தமாக 3,760,319.53 லீற்றர் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. மூன்று கம்பனிகள் தொடர்பாக சுங்கத் திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரமும் இறக்குமதி செய்யப்பட்ட அளவுகளுக்குமிடையே மொத்தமாக 4,553,811.7 லீற்றர்களினால் குறிப்பிடத்தக்க அளவிலான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| கம்பனியின் பெயர் | கட்டளையிடப்பட்ட அளவு (2019-9-30 ஆந் திகதியில்) | இறக்குமதி செய்யப்பட்ட அளவு (2019-9-30 ஆந் திகதியில்) | சுங்கத் தரவுகளின் பிரகாரம் இறக்குமதி (2019-9-30 ஆந் திகதியில் |
|---|---|---|---|
| | மொத்த லீற்றர் | மொத்த லீற்றர் | மொத்த லீற்றர் |
| ஐ.டீ.எல்.கம்பனி | 318,967.00 | 268,815.00 | 322,919.30 |
| டீ.சீ.எஸ்.எல் கம்பனி | 8,485,986.00 | 11,953,005.00 | 7,790,171.00 |
| பெரிசில் கம்பனி | 677,149.47 | 970,450.00 | 525,368.00 |
| | 9,482,102.47 | 13,192,270.00 | 8,638,458.30 |

மேலே குறிப்பிட்டவாறு குறிப்பிடத்தக்க அளவிலான வித்தியாசம் காணப்பட்டதன் காரணமாக ஸ்பிரிட் இறக்குமதி செய்யும் போது மதுவரி திணைக்களம், இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம், சுங்கத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களால் அந்நடவடிக்கைகள் முறைப்படியாக ஒழுங்குபடுத்துதல் செய்யப்பட்டதா என்பது கணக்காய்வின் போது பாரதூரமான வகையில் சச்சரவுத் தன்மைக்கு உட்பட்டது.

3.3.2.3 டீ.சீ.எஸ்.எல் கம்பனியினால் பழைய குதத்திற்கு பல்வேறு நாடுகளில்ருந்து ஸ்பிரிட் இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன் அந்த இறக்குமதி செய்யப்பட்ட ஸ்பிரிட்டை குதத்திற்கு எடுத்துச் சென்ற அளவிற்கும் உள்ளபடியாக குதத்திற்கு கிடைத்துள்ள அளவிற்கும் (டீ-33 இன் பிரகாரம்) இடையே பின்வருமாறான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

| ஆண்டும் மாதமும் | டீ-28 இன் பிரகாரம் ஸ்பிரிட்டின் அளவு | டீ-33 இன் பிரகாரம் ஸ்பிரிட்டின் அளவு | வித்தியாசம் |
|---|---|---|---|
| | சு.ம.லீற்றர் | சு.ம.லீற்றர் | சு.ம.லீற்றர் |
| 2020 யூலை வரை | 165,480.2 | 166,087.2 | 607.0 |
| 2019 | 1,945,356.7 | 1,954,611.5 | 9,254.8 |
| 2018 | 2,329,413.8 | 2,343,205.2 | 13,791.4 |

மேலே குறிப்பிட்ட வித்தியாசங்கள் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட மதுவரி மற்றும் சுங்கவரிப் பணம் அறவிடப்பட்டதா என்பது தொடர்பாக கணக்காய்விற்கு உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் கம்பனிக்கு ஸ்பிரிட்களை

மேலதிகமாக இறக்குமதி செய்வதற்கு வாய்ப்பளிப்பதன் மூலம் ஸ்பிரிட்டினை இறக்குமதி செய்யும் போது மோசடியான கூட்டுச்சேர்ப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது என்ற ஐயப்பாட்டினை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதுள்ளது.

3.3.2.4 டீ.சி.எஸ்.எல் பழைய குதத்திற்கு 2019 திசெம்பர் மாதம் தென் ஆபிரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்ட விஸ்டம் ஸ்பிரிட் 13,578.7 சு.ம.லீ ஆனது டீ-33 பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க இந்த இறக்குமதி செய்யப்பட்ட ஸ்பிரிட் இருப்புக்குரிய மதுபான உற்பத்தி சம்பந்தமாக அரசாங்க வருமானம் இழக்கப்பட்டுள்ளதா என்ற ஐயப்பாட்டினை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதுள்ளது.

3.3.2.5 ஐ.டி.எல் உற்பத்திச்சாலையில் ஸ்பிரிட் இறக்குமதிக்குரிய போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களில் (டீ-28) குறிப்பிட்ட ஸ்பிரிட்களின் அளவு 320,474-1 சு.ம.லீ ஆனதுடன் உள்ளபடியான பெறுவனவுகள் தொடர்பாக பதியப்படுகின்ற பதிவேட்டில் (டீ-33) பதியப்பட்ட ஸ்பிரிட்களின் அளவு 323,317.6 சு.ம.லீ ஆக இருந்ததனால் 2,843.5 சு.ம.லீ வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

3.3.2.6 டி.சீ.எஸ்.எல் புதிய குதத்திற்காக 2020 சனவரி 13 ஆந் திகதிய D330947 ஆம் இலக்க போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் அவுஸ்ரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விஸ்டம் ஸ்பிரிட் இருப்பு 13,054 லீற்றர்கள் (சுத்திகரிக்கப்பட்ட மதுசாரம் 12,584.1 லீற்றர்) டீ-33 பதிவேட்டில் பீப்பாய் இலக்கம் 38 இற்கு மாற்றப்பட்டது எனக்குறிப்பிடப்பட்டிருந்தும் டீ-8 பதிவேட்டில் பீப்பாய் இலக்கம் 38 இற்கு அந்த ஸ்பிரிட் பயன்படுத்துதல் இடம்பெற்ற மதுபான உற்பத்திக்குரிய வரிப்பணம் அறவிடப்பட்டதா என்பது கணக்காய்வில் பிரச்சினைக்குரிய விடயமாகும்.

3.3.2.7 டி.சீ.எஸ்.எல் புதிய குதத்திற்காக 2020 மார்ச் 13 ஆந் திகதிய D/286523 ஆம் இலக்க போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் பாக்கிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விஸ்டம் ஸ்பிரிட் இருப்பு 6,807 லீற்றர்கள் (சுத்திகரிக்கப்பட்ட மதுசாரம் 6,542.3 லீற்றர் அந்த லேகளுக்கு வழங்கப்பட்டது. என்பது D 33 பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அந்த ஸ்பிரிட் பயன்படுத்துதல் இடம்பெற்ற மதுபான உற்பத்திக்குரிய வரிப்பணம் அறவிடப்பட்டதா என்பது மற்றும் பேணப்பட்ட கணக்கு புத்தகங்களின் சரியான தன்மை தொடர்பில் பிரச்சினைக்குரியதாக காணப்பட்டது.

ஸ்பிரிட் இறக்குமதி செய்தல் மற்றும் கணக்கீடு செய்தல் சம்பந்தமாக மேலே குறிப்பிட்டவாறு குறிப்பிடத்தக்க அளவு வித்தியாசம் காணப்பட்டதன் காரணமாக மதுவரித் திணைக்களத்தினால் அந்நடவடிக்கைகள் முறைப்படியாக ஒழுங்குபடுத்துதல் மேற்கொள்ளப்பட்டதா என்பது கணக்காய்வில் பாரதூரமான சச்சரவுக்குரிய விடயமாகும்.

3.3.2.8 ஒரு ஆண்டிற்குத் தேவையான எதயில் மதுபானத்தின் அளவு தொடர்பாக திணைக்களத்தால் உறுதியாக இனங்காணல் இடம்பெற்றிருக்காததுடன் மேலதிக இறக்குமதி சம்பந்தமாக தண்டப்பணத்தை விதிப்பதற்குத் தேவையான சட்ட விதிகளை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க விண்ணப்பிக்கப்பட்ட அளவிற்கு மேலதிகமாக மிகையாக இறக்குமதி செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

3.3.2.9 சட்டவிரோதமாக ஸ்பிரிட் இறக்குமதி செய்தல் பயன்படுத்துதல் சம்பந்தமாக பின்வருமாறு அறிக்கையிடுதல் இடம்பெற்றுள்ளது.

(அ) ஹிங்குரான உற்பத்திச் சாலையால் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட எதனோல் ஸ்பிரிட் 518,600 லீற்றர்கள் பயன்படுத்துதல் சம்பந்தமாக சுங்கத் திணைக்களம் மேற்கொண்ட விசாரணைகளின் பிரகாரம் கம்பனியின் பணிப்பாளர் உட்பட மூன்று நபர்களிடமிருந்து ரூபா 270,000,000 தண்டப் பணம் அறவிடப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக மது வரித் திணைக்களத்தினால் மேற்கொண்ட விசாரணைகளின் பிரகாரம் மதுவரிப் பணமாக ரூபா 588,900,344 அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) ஹிங்குரானை டிஸ்டலரீன் கம்பனிக்குச் சொந்தமான வடிசாலையில் 2015 மே 21 ஆந் திகதிய மதுவரி உத்தியோகத்தர்களின் பரிசீலனைகளின் பிரகாரம் சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்ட 19,440 லீற்றர் விஸ்டம் இஸ்பிரிட்களுக்காக ரூபா 50,620,739 தொகையான மதுவரியினை அறவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அப்பணம் 2018 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. அது சம்பந்தமாக கணக்காய்வு ஐயவினா வழங்கியதன் பின்னர் 2019 ஆம் ஆண்டின் போது அப்பணத்திலிருந்து ரூபா 40,072,443 அறவிடப்பட்டிருந்ததுடன் 2020 யூலை மாதம் வரை மேலும் அறவிட வேண்டியிருந்த பணம் ரூபா 10,548,295 ஆகும்.

(இ) கலகெதர ரோயல் காஸ்க் டிஸ்டிலரீஸ் தனியார் கம்பனியால் 2019 ஆம் ஆண்டின் போது சட்டவிரோதமாக மோலட் ஸ்பிரிட் மொத்தமாக 5000 லீற்றர் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. அனுமதிப்பத்திரமின்றி இறக்குமதி செய்யப்பட்ட ஸ்பிரிட் இருப்புக்காக ரூபா 500,000 தொகையான ஒட்டுமொத்த கட்டணம் அறவிடப்பட்டு அதற்காக உரிய ஸ்பிரிட் இருப்பு ஏனைய நிறுவனத்திற்கு எதுவித பரிசீலனையுமின்றி உற்பத்தியாளருக்குத் தேவையான வகையில் பரிமாற்றம் செய்து பெற்றுக் கொள்வதற்கு வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க மதுவரி சம்பந்தமாக மதுவரி கட்டளைச்சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டிய ஒழுங்குபடுத்தல் நடைமுறையானது நிறுவனத்தினால் முறைப்படியாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது கணக்காய்வில் சிக்கலுடையதாக இருந்தது.

### 3.3.3 உள்நாட்டு ஸ்பிரிட்களின் பயன்பாடு

------------------------------------------------------------

3.3.3.1 2019 சனவரியிலிருந்து செப்தெம்பர் 30 வரையான காலத்தில் போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் அக்மி உற்பத்திச் சாலைக்காக ஸ்பிரிட் பெறுவனவுகளின் அளவுக்கும் வழங்கல் பதிவேட்டில் (டீ-9) குறிப்பிட்ட ஸ்பிரிட் பெறுவனவுகளுக்குமிடையே 7,650 லீற்றர் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

3.3.3.2 வடிசாலைக்கு / உற்பத்திச்சாலைக்கு ஸ்பிரிட்களை பெற்றுக்கொள்ளும் போது அல்லது வழங்கும் போது போக்குவரத்து அனுமதிப்பத்திரம் (டீ-28) பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் அந்த அனுமதிப்பத்திரத்தின் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்ற ஸ்பிரிட்கள் சம்பந்தமாக உரிய வடிசாலை / உற்பத்திச்சாலையினால் அந்த ஸ்பிரிட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்துதல் பதிவு செய்யப்படுதல் வேண்டும். போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்ட ஸ்பிரிட்களின் அளவுக்கும் டீ-33 உறுதிப்படுத்தல் பதிவேட்டில் குறிப்பிட்ட அளவுக்குமிடையே இணக்கமின்மைகள் காணப்பட்டன. ஹிங்குரான உற்பத்திச்சாலையில் 2019 சனவரியிலிருந்து செப்தெம்பர் 30 வரையான காலப்பகுதியின் போது டீ-33 பதிவேட்டின் பிரகாரம் தென்னை ஸ்பிரிட் மொத்தமாக 10,267.4 லீற்றர் கிடைத்திருந்ததுடன் டீ-28 போக்குவரத்து பதிவேட்டின் பிரகாரம் அது மொத்தமாக 11,993.5 லீற்றர்களாகும். அதற்கிணங்க வரி வருமானத்தை பாதுகாப்பதற்காக ஸ்பிரிட்டினை எடுத்துச் செல்லல் சம்பந்தமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை திருப்தியான மட்டத்தில் அமுல்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

3.3.3.3 ஒவ்வொரு உற்பத்திச் சாலையினாலும் மதுபானங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான போத்தல், மூடி, லேபல் என்பன தொடர்பாக கொள்வனவு செய்த மற்றும் பயன்படுத்திய அளவு எவ்வளவு என்பது தொடர்பான மேற்பார்வையானது நிலையப் பொறுப்பு மதுவரி உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படுகின்றது என்பது அவதானிக்கப்படவில்லை. அதற்கிணங்க பகிர்ந்தளிக்கப்படுகின்ற மதுபானங்களின் அளவு, சந்தைப்படுத்தப்படுகின்ற மதுபானங்களின் அளவு, வரி அறவிடப்படுகின்ற மதுபானங்களின் அளவு முதலிய கட்டங்கள் ஒன்றுக்கொன்று பொருந்துகின்றதா என்பது தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காக திருப்திகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

3.3.3.4 தென்னை ஸ்பிரிட் உற்பத்தி செய்வதற்கு தேவையான கள்ளு பெற்றுக்கொள்வது தொடர்பாக கணக்காய்வின் போது பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட தும்மலசூரிய எக்மி வடிசாலைக்காக கள்ளு வழங்குவது தொடர்பாக வழங்குனரின் பதிவேட்டின் பிரகாரம் இரண்டு வழங்குனர்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் கள்ளு சீவுவதற்காக புள்ளியிடப்பட்ட தென்னை மரங்களின் எண்ணிக்கையின் மொத்தம் 12,000 ஆகும். அதற்கிணங்க வழங்கப்பட வேண்டிய உச்ச அளவான கள்ளின் அவு 18,000 லீற்றர்களாகும். (ஒரு நாளுக்கு) இதன் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கள்ளு சேகரிக்கும் நிலையங்களுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட தென்னை மரங்களிலிருந்து வழங்கப்பட வேண்டிய உச்ச அளவான கள்ளின் அளவில் 98 சதவீதத்திற்கு அண்மித்த அளவானவை நாளாந்தம் வழங்குதல் இடம்பெறுகின்றது என்பதற்கு நாளாந்தம் கள்ளுப் பெறுவனவு பதிவேட்டின் பிரகாரம் அறிவிக்கப்பட்டிருந்தமை பிரச்சினைக்குரிய விடயமாகும்.

(ஆ) கள்ளு வழங்கல் பதிவேட்டினைப் பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டதானது 2019 மார்ச் மாதத்திலிருந்து இரண்டு அனுமதிப் பத்திரங்களில் 5,075 தென்னை மரங்கள் தொடர்பாக இரண்டு வழங்குனர்களினால் கள்ளு வழங்குதல் நிறுத்தப்பட்டுள்ளது என்பதாகும். அதற்கிணங்க 2019 மார்ச் மாதத்திலிருந்து அங்கீகரித்த தென்னை மரங்களின் எண்ணிக்கை 6,925 ஆக இருந்த போதிலும், சுங்கவரி டீ-7 பதிவேட்டின் பிரகாரம் புள்ளியிடப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 11,330 ஆகவும் கள்ளு சீவப்படுகின்ற மரங்களின் எண்ணிக்கை 6,255 ஆகுவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க மதுவரி வருமானத்தை பாதுகாப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் நடைமுறையில்

முக்கியத்துவமானது என பொறுப்புக்கூறக்கூடிய தரப்பினர்கள் கவனம் செலுத்தியுள்ளார்கள் என்பது அவதானிக்கப்படவில்லை.

(இ) 2018 ஆம் ஆண்டிலிருந்து 2019 செப்தெம்பர் மாதம் வரையான காலத்தில் ஒப்பந்தக்காரர்களால் கள்ளு வழங்காமை சம்பந்தமாக மதுவரி நிலையம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டிருக்காததுடன் கள்ளு வழங்காமைக்குரிய காரணத்தை பரீட்சிப்பதற்கு வடிசாலைக்குப் பொறுப்பான உத்தியோகத்தராலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. அதற்கிணங்க மதுவரி வருமானத்தை பாதுகாப்பதற்கும் கைத்தொழில் குற்றங்களை குறைப்பதற்குமாக குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பினை உரிய அலுவலகம் மேற்கொண்டுள்ளது என்பது அவதானிக்கப்படவில்லை.

3.3.3.5 ரோயல் காஸ்க் வடிசாலையில் ஸ்பிரிட் உற்பத்திக்காக மாவு பயன்படுத்துதல் டீ-7 பதிவேட்டின் பிரகாரமான தகவலும் பயன்படுத்தப்பட்ட இறுங்கு மாவு சம்பந்தமான பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட தகவலும் ஒன்றுக்கொன்று இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டது.

| **ஆண்டு** | **டீ-7 பதிவேட்டின் பிரகாரம் மாவு பயன்பாடு** | **மூலப்பொருள் பதிவேட்டின் பிரகாரம் மாவு பயன்பாடு** | **வித்தியாசம்** |
|---|---|---|---|
| | மெ.தொன். | மெ.தொன். | மெ.தொன் |
| 2019 | 1,052.82 | 840.71 | 212.11 |
| 2020 யூன் வரை | 3,341.39 | 3,178.1 | 163.29 |

3.3.3.6 ஒவ்வொரு உற்பத்தியாளர்களுக்கும் லேபல்களை அங்கீகரித்துக் கொள்வது தொடர்பாக லேபல்களில் குறிப்பிட வேண்டிய விடயங்கள் தொடர்பாக மதுவரி அறிவித்தல் தயாரிக்கப்பட்டிருந்தும் ஒவ்வொரு உற்பத்தியாளரினாலும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட லேபல்களின் அளவு, பயன்படுத்தப்பட்டுள்ள அளவு, அழிவடைந்துள்ள அளவு முதலிய விடயங்கள் கவனம் செலுலத்தப்படாமையின் காரணமாக அரசாங்க வருமானத்தினை பாதுகாப்பதற்காக சிறந்த மேற்பார்வை மதுவரி உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.3.4 உற்பத்தி

---------------

மதுவரி திணைக்களத்தின் கீழ் 18 மதுபான நிலையங்கள் (அனுமதிப்பத்திரம் பெற்ற உற்பத்தி நிலையங்கள் 23 ஆகும்.) செயற்படுவதுடன் அந்த உற்பத்திச் சாலைகளால் 2018 ஆம் ஆண்டிற்காக வருடாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்ற மதுபான உற்பத்திகள் மற்றும் அதன் மூலம் வருமானத்திற்கான பங்களிப்புக்கள் தொடர்பான தகவல்கள் பின்னிணைப்பு 03 இல் தரப்படுகின்றது. அதற்கிணங்க மொத்த மதுபான உற்பத்தியும் ஒவ்வொரு உற்பத்திக் கம்பனியின் சந்தைப் பங்கும் தொடர்பான பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டதானது கடினமான மதுபானங்களை உற்பத்தி செய்யும் 19 கம்பனிகள் செறய்படும் நிலையில் காணப்பட்டிருந்தும் மொத்த வருமானத்தில் 83.71 சதவீதமான பங்களிப்பினை 3 கம்பனிகள் மாத்திரம் வழங்கியிருந்தன. 4 உற்பத்திக் கம்பனிகளின் பங்களிப்பு 2 சதவீதத்திற்கும் 3 சதவீதத்திற்கும் இடைப்பட்ட மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் ஏனைய கம்பனிகளின் பங்களிப்பும் 22 சதவீதத்தினை விடக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அதற்கிணங்க உற்பத்தி குறைந்த கம்பனிகள் சம்பந்தமாக கவனம் செலுத்தி அந்த அசாதாரணமான நிலைமை தொடர்பாக மதுவரி உத்தியோகத்தர்களால் விடயத்தை ஆராய்ந்து பார்த்து அரசாங்க வருமானத்தை பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்படவில்லை.

3.3.4.1 முன்னைய பல ஆண்டுகளில் உற்பத்திச்சாலைகளால் பயன்படுத்தப்பட்டுள்ள தென்னை, பனை, விஸ்டம் ஸ்பிரிட்களின் அளவு, அதன் மூம் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானங்களின் அளவு மற்றும் பயன்பாடு தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| **ஆண்டு** | **பயன்படுத்தப்பட்டுள்ள ஸ்பிரிட்களின் அளவு (உள்நாடு மற்றும் இறக்குமதி)** | **மதுபான உற்பத்தி** |
|---|---|---|
| | சு.ம.லீ | சு.ம.லீ |
| 2016 | 34,550,864.97 | 31,685,768.52 |
| 2017 | 46,211,046.97 | 28,490,312.10 |
| 2018 | 26,761,437.76 | 25,221,252.70 |

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த ஸ்பிரிட் பாவனையுடன் ஒப்பிடுகையில் வருடாந்த உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அளவான அதிகரிப்பு காணப்படுவதனால் ஸ்பிரிட் பயன்பாட்டிற்கும் உற்பத்திக்குமிடையே தொடர்புகள் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. திணைக்களத்தின் உயர் முகாமைத்துவம் அல்லது பிராந்திய மதுவரி அலுவலக உத்தியோகத்தர்களால் இவ்விடயங்கள் தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து பார்த்தல் மேற்கொண்டு மதுவரி வருமானம் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்படவில்லை. மதுபான உற்பத்தியின் அடிப்படையில் மதுவரி அறவிடப்படுவதனால் பயன்படுத்தப்பட்டுள்ள ஸ்பிரிட்டின் அளவுடன் ஒப்பிடுகையில் மதுபான உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அளவு குறைவு காணப்படுதல் சச்சரவுத் தன்மைக்குரிய விடயமாகும்.

(ஆ) ஸ்பிரிட் இறக்குமதி செய்தல், உள்நாட்டில் ஸ்பிரிட் உற்பத்தி செய்தல், மதுபானங்களின் உற்பத்தி ஆகிய விடயங்களை கவனத்திற்கு எடுத்து பார்க்கின்ற போது மட்டுப்பாடுகள் இன்றி ஸ்பிரிட்கள் நாட்டில் சுழற்சியடைகின்றது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) வருடாந்த உற்பத்தியில் வீழ்ச்சி காணக்கூடியதாக இருந்த போதிலும், பின்வரும் தரவுகளின் பிரகாரம் மதுபான பாவனை உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தமை தொடர்பாக சிக்கலான நிலைமை சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இந்த வழமைக்கு மாற்றமான நிலைமை தொடர்பாக ஆழமாக பகுப்பாய்வு செய்து அதன்மூலம் ஏற்படக்கூடிய பாதகமான நிலைமை தொடர்பாக பொறுப்புக்கூறக் கூடிய தரப்பினர்களால் பொருத்தமான பரிகாரத்தில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்படவில்லை.

| **ஆண்டு** | **பயன்பாடு** |
|---|---|
| | லீற்றர் |
| 2016 | 191,100,412.58 |
| 2017 | 184,879,442.29 |
| 2018 | 224,976,196.65 |

3.3.4.2 வெல்கம, தத்தபத்தரவில் அமைந்துள்ள ரொக்லேண்ட் டிஸ்டலரீஸ் (தனியார்) கம்பனியின் செயற்பாட்டு முகாமையாளரின் 2019 பெப்ரவரி 21 ஆந் திகதிய கடிதம் மற்றும் பிரதி மதுவரி ஆணையாளரின் (வருமானம்) 2019 மே 02 ஆந் திகதிய ஈடீ/04/01/09-vii ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் 2018 மார்ச் 07 ஆந் திகதியிலிருந்து

2018 ஏப்ரல் 09 ஆந் திகதிவரையான கால எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட திறீ ஸ்டார் பிலக் லேபல் வகையான 11,884.875 லீற்றர் அளவான சாராய இருப்பானது உறிஞ்சி எடுக்கக்கூடிய அணுக்கள் கொண்ட மதுபானக் குறைபாடுகள் கொண்டதாக போத்தலில் அடைத்தல் தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், உரிய காலப்பகுதியில் 74,601 லீற்றர் சராயம் உற்பத்தி செய்யப்பட்டது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க இவ்வாறு குறைபாடுகளுடன் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த சாராய இருப்பில் தற்பொழுது வரை 62,716.125 லீற்றர் சந்தைக்கு வழங்கியதன் பின்னர் மீண்டும் களஞ்சியத்திற்கு சேகரிக்கப்படாதிருந்ததுடன் அதற்கிணங்க அந்த அளவு பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. மது வரித் திணைக்களத்தின் முழுமையான மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தலின் கீழ் இவ்வாறு குறைபாடுகளுடன் சாராயம் உற்பத்தி செய்தல் இடம்பெற்று சந்தைக்கு வழங்கியமையானது கணக்காய்வின் போது பாரதூரமான சச்சரவுத் தன்மையான விடயமாகும். அதற்கிணங்க, சாராயத்தின் நியம தரம் தொடர்பாக உத்தியோகத்தர்களின் மேற்பார்வை மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

3.3.4.3 V.A.உற்பத்திசாலையில் 2017 ஆம் ஆண்டின் போது சாராய உற்பத்திக்காக வழங்கப்பட்ட ஸ்பிரிட்களின் அளவு உடனடி மதுபானம் 564,406.06 லீற்றர்களும் போத்தலில் இடப்பட்ட சாராய உற்பத்தி உடனடி மதுபானம் 568,566.87 லீற்றர்களுமாக இருந்ததனால் உடனடி மதுபானத்தில் 4,160 லீற்றர் அவான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. இம்முரண்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து இதிலிருந்து அரசாங்க வருமானத்திற்கு ஏற்படுகின்ற தாக்கம் தொடர்பாக உத்தியோகத்தர்களால் கவனம் செலுத்தப்பட்டது என்பது அவதானிக்கப்படவில்லை.

3.3.4.4 உற்பத்திச் செயற்பாடு தொடர்பான (டீ-7) பதிவேட்டினை பரீட்சித்த போது ஹிங்குரானை வடிசாலையினால் (கொராபே) இறுங்கு மாவினைப் பயன்படுத்தி ஸ்பிரிட் உற்பத்தி செய்தல் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடத்தக்க அளவான வித்தியாசம் அவதானிக்கப்பட்டதனால் அந்த வித்தியாசம் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து பரிகாரத்தை ஈடுபடுத்துவதற்கு பொறுப்புக்கூறக்கூடிய நபர்கள் மத்தியஸ்தம் செய்துள்ளார்கள் என்பது அவதானிக்கப்படவில்லை.

| ஆண்டு | மாவு பயன்பாடு | 01 தொன் மாவிற்கு ஸ்பிரிட் மற்றும் தூய்மைப் படுத்தாத ஸ்பிரிட்டின் உற்பத்தி | உற்பத்தி செய்யப்பட வேண்டிய தேறிய மற்றும் தூய்மைப் படுத்தப்படாத ஸ்பிரிட்டின் அளவு | உற்பத்தி செய்யப்பட்ட தேறிய மற்றும் தூய்மைப் படுத்தப்படாத ஸ்பிரிட்களின் அளவு | வித்தியாசம் |
|---|---|---|---|---|---|
| | தொன் | சு.ம.லீற்றர் | சு.ம.லீற்றர் | சு.ம.லீற்றர் | சு.ம.லீற்றர் |
| 2017 | 1,711.55 | 396 | 677,773.8 | 800,909.3 | 123,135.5 |
| 2018 | 2,174.4 | 396 | 861,062.4 | 1,003,174.8 | 142,112.4 |
| 2019 செப்தெம்பர் 30 வரை | 1,702.2 | 396 | 674,071.2 | 743,870.6 | 69,799.6 |

3.3.4.5 ரோயல் காஸ்க் வடிசாலையினால் பயன்படுத்தப்பட்டுள்ள இறுங்கு மாவுடன் ஒப்பிடுகையில் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் சிபார்சின் பிரகாரம் உற்பத்தி செய்யப்பட வேண்டிய எதயில் மதுபானத்தின் அளவுக்கும் சகே உற்பத்தி அளவுடன் வடிசாலையினால் உள்ளபடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ள அளவுக்கும் இடையே பின்வருமாறு இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இது சம்பந்தமாக மதுவரி உத்தியோகத்தரினால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

| ஆண்டு | ஈடுபடுத்திய மாவு | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் சிபார்சின் பிரகாரம் உற்பத்தி செய்யப்பட வேண்டிய அளவு | | உற்பத்தி செய்யப்பட்ட அளவு | |
|---|---|---|---|---|---|
| | | சக்கை | ஸ்பிரிட் | சக்கை | ஸ்பிரிட் |
| | மெற்றிக் தொன் | மொத்த லீற்றர் | சு.ம.லீற்றர் | மொத்த லீற்றர் | சு.ம.லீற்றர் |
| 2019 | 840.71 | 2,076,553 | 294,248 | 1,438,500 | 401,675 |
| 2020 யூன் வரை | 3,178.1 | 7,849,907 | 1,112,335 | 140,000 | 1,888,472 |

3.3.4.6 ஐ.டீ.எல் உற்பத்திச் சாலையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை உற்பத்திக்காக ஈடுபடுத்தப்பட்ட ஸ்பிரிட்டின் அளவுக்கும் மதுபான உற்பத்திக்குமிடையே பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. இது சம்பந்தமாக மதுவரி உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தியுள்ளார்கள் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

| **ஆண்டு** | **பயன்படுத்தப்பட்ட ஸ்பிரிட்டின் ஏற்றுக் கொள்ளப்பட்ட கடினம்** | **மதுபான உற்பத்தி ஏற்றுக்கொள்ளப்பட்ட கடினம்** | **வித்தியாசம் ஏற்றுக் கொள்ளப்பட்ட கடினம்** |
|---|---|---|---|
| ---------- | ------------------------------ | ------------------------------ | ------------------------------ |
| | லீற்றர் | லீற்றர் | லீற்றர் |
| 2015 | 6,091,157.50 | 6,063,227.06 | 27,930.43 |
| 2016 | 5,609,812.98 | 4,653,049.05 | 956,763.93 |
| 2017 | 4,691,429.63 | 4,641,930.18 | 49,499.45 |

3.3.4.7 ரோயல் காஸ்க் டிஸ்டிலரீஸ் தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்ட மதுவரி அனுமதிப்பத்திரத்திற்குரிய மதுவரி அறிவித்தல்களில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குப் புறம்பாக கம்பனியானது மதுவரி ஆணையாளர் நாயகத்துடன் 2018 சனவரி 12 மற்றும் 2018 பெப்ரவரி 16 ஆந் திகதி மேற்கொண்ட உடன்படிக்கைகளில் குறிப்பிட்ட சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பம் பின்வருமாறு அவதானிக்கப்பட்டது.

(அ) சக்கை உற்பத்தியினை ஆகக்குறைந்தது ஒரு மாதத்திற்கு மொத்த லீற்றர் 150,000 இனை பூரணப்படுத்த வேண்டுமென இணங்கிக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பம் பின்வருமாறு அவதானிக்கப்பட்டது.

| **மாதம்** | **2018 ஆம் ஆண்டு** | **2019 ஆம் ஆண்டு** | **2020 ஆம் ஆண்டு** |
|---|---|---|---|
| --------- | --------------------------- | --------------------------- | --------------------------- |
| | மொத்த லீற்றர் | இருப்பு லீற்றர் | மொத்த லீற்றர் |
| சனவரி | - | பூரணப்படுத்தப்பட்டது | 40,000 |
| பெப்ரவரி | - | பூரணப்படுத்தப்பட்டது | 40,000 |
| மார்ச் | 50,000 | பூரணப்படுத்தப்பட்டது | 40,000 |
| ஏப்ரல் | - | 105,000 | - |

| | | | |
|---|---|---|---|
| மே | 46,500 | பூரணப்படுத்தப்பட்டது | - |
| யூன் | 52,500 | 125,000 | 20,000 |
| யூலை | 60,000 | 63,500 | |
| ஆகஸ்ட் | 95,300 | 59,000 | |
| செப்தெம்பர் | 35,000 | 60,000 | |
| ஒக்தோபர் | பூரணப்படுத்தப்பட்டது | 60,000 | |
| நவம்பர் | 100,000 | 40,000 | |
| திசெம்பர் | பூரணப்படுத்தப்பட்டது | 40,000 | |

ஆகக்குறைந்த உற்பத்தி இலக்கினை பூரணப்படுத்த முடியாது போனால் அடுத்துவரும் மாதம் வடிசாலையில் ஸ்பிரிட் வடிக்கும் நடவடிக்கையினை கைவிடும் அதிகாரம் இரு தரப்பினர்களாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தும் முதலாம் தரப்பினரால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பின்வத்தமுல்ல, பதலவத்த விலாசத்தின் நிர்மாண நடவடிக்கையை முடிவுறுத்தும் வரை 2018 பெப்ரவரி 16 ஆந் திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்காக மாத்திரம் வடிசாலை சுற்றாடலில் சக்கை உற்பத்தி செய்யப்பட்டு கலகெதர பாதுக்கை ஆகிய இடங்களில் போத்தலில் அடைப்பதற்காக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கி கொள்ளப்பட்டிருந்ததுடன் 2020 யூலை 14 கணக்காய்வுத் திகதி வரை இரண்டு ஆண்டுகளை மிகைத்திருந்தும் அச்சுற்றாடலிலேயே சக்கை உற்பத்தியினை போத்தலில் அடைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

(இ) 2018 பெப்ரவரி 16 ஆந் திகதி கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் CS1801414 ஆம் இலக்க அறிக்கையின் பிரகாரம் தொடக்க சந்தர்ப்பத்தில் புளித்து நுரைக்கச் செய்வதிலிருந்து (Fermented wash) கிடைக்கின்ற எதனோல் காரத்தின் அளவுக்கு சக்கை உற்பத்தியின் காரத்தின் அளவு சமமாக இருக்க வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தும் கம்பனியினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள சக்கைகளின் மதுபான காரம் 12.5 சதவீதமாகக் காணப்பட்டது. (2017 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட சக்கைகளின் காரம் 15 சதவீதமாகக் காணப்பட்டது. அதற்கிணங்க கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் சிபார்சுகளுக்கு முரணாக கணக்காய்வில் சச்சரவிற்கு உட்பட்டிருந்தது.

### 3.3.5 உற்பத்தி நியமம்

-----------------------------

விஸ்டம் ஸ்பிரிட்டினை மூலமாகப் பயன்படுத்தி பாவனைக்காக உற்பத்தி செய்யப்படுகின்ற மதுபான வகைகளை சந்தைக்கு வழங்குவதற்கு முன்னர் உற்பத்தியாளர்களால் நிறப் பொருட்களை ஈடுபடுத்துதல் இடம்பெறுவதுடன் ஒவ்வொரு வகைகளின் சாராயம் அல்லது வெளிநாட்டு மதுபான வகைகளுக்காக ருசியான பொருள் ஈடுபடுத்தப்பட்டு ருசிசேர்க்கப்படுகின்றது. இந்த அனைத்து நடவடிக்கைகளும் மதுவரி அறிவித்தலில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு இணங்க உற்பத்தியாளரால் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதனை ஆராய்ந்து பார்க்கின்ற பொறுப்பு மதுவரிஉத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மதுபான வகை உற்பத்தியின் போதும், அங்கீகரித்த நியமங்கள் மற்றும் காரத்தின் அளவுகளின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்றது எனவும் லேபல்களில் உள்ளடக்கப்பட வேண்டிய அனைத்து தகவல்களும் சரியாக உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதனையும் ஆராய்ந்து பார்த்தல் மதுவரி உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மேலும் வடிசாலைகளில் உள்ள வெவ்வேறான தட்டுக்களிலிருந்து எடுத்து மூலங்களிலிருந்து வடித்தல் இடம்பெறுகின்ற பல்வேறு சந்தர்ப்பங்களின் போது மாதிரிகளைப் பெற்று அரசாங்கத்தின் இரசாயனப் பகுப்பாய்வளருக்கு அனுப்பி பகுப்பாய்வு அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளுவது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

3.3.5.1 திணைக்களத்தின் நிபுணத்துவ கட்டளையின் பிரகாரம் மாதாந்தம் மாதிரிகளைப் பெற்று அரசாங்கத்தின் இரசாயனப் பகுப்பாய்வளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகளை இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்புவது தாமதமான சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதனால் நியம தரமான சாராயம் சந்தைக்கு வழங்குப்படுகின்றதா என்பது தொடர்பாக கணக்காய்வில் சிக்கலைக் கொண்டதாகும். (விபரம், பின்னிணைப்பு - 04)

3.3.5.2 பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகளின் பதிவேட்டில் குறிப்பிட்ட காரத்தின் அளவுக்கும் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரமான காரத்தின் அளவுக்குமிடையே வித்தியாசம் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்னிணைப்பு 05 இன் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. கள்ளுகளில் காணப்பட வேண்டிய அமிலங்களின் அங்கீகரித்த எல்லைக்குள் உள்ளடக்கப்பட்டிருக்காமை தொடர்பாக அறிக்கையிடப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக இணக்கப்பாட்டு கட்டணம் அறவிடுதல்

அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

3.3.5.3 இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை கிடைத்ததன் பின்னர் உரிய மாதிரிகளை ஏடுகளில் பதிவதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பமும் அவதானிக்கப்பட்டது. உதாரணமாக: எக்மி வடிசாலை 2018 திசெம்பர் 26 ஆந் திகதியிலிருந்து 2019 செப்தெம்பர் 18 ஆந் திகதி வரை எடுத்த 80 மாதிரிகள் அலுவலகத்தில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

3.3.5.4 உற்பத்தியாளரினால் புதியஉற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கும் போது அப்புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துவது தொடர்பாக உற்பத்திச் சாலையினுள் அதற்காக தேவையான வசதிகளும் தேவைப்பாடுகளும் அடைந்து கொள்ளப்பட்டுள்ளனவா என்பதனை உத்தியோகத்தர்களால் ஆராய்ந்துப் பார்த்தல் வேண்டும். அவ்வாறே புதிய உற்பத்திகளுக்குரிய மாதிரிகளை அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பி உரிய பகுப்பாய்வு அறிக்கையினைப் பெற்றுக்கொண்டு நிர்ணயிக்கப்பட்ட நியமங்களைக் கொண்டதா என்பதனைப் பரீட்சித்தல் வேண்டும். வீ.ஏ.உற்பத்திச் சாலையினால் 2017 ஆம் ஆண்டின் போது V.A.Black Arrack (கிரேன் ஸ்பிரிட் கலப்பதனூடாக ருசியை அதிகரித்தல்) மற்றும் White Horse Arrack என்ற புதிய 2 மதுபான வகைகளை அறிமுகப்படுத்துவது தொடர்பாக 2017 யூலை 14 ஆந் திகதி இரண்டு மாதிரிகள் மதுவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்படாமையினால் வெளிப்படுத்தலானது மதுவரி உத்தியோகத்தர்களால் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் தேவையான மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதாகும்.

3.3.5.5 ஹங்வெல்ல எக்மி உற்பத்திச்சாலையில் 2018 ஆம் ஆண்டு மற்றும் 2019 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதியின் போது சுத்திகரிக்கப்பட்ட மதுபானம் முறையே 892,352.077 லீற்றர் மற்றும் 690,435.436 லீற்றர் உற்பத்திக்குரிய மாதிரிகளைப் பெற்றுக் கொண்டு அரசாங்க இரசாயனப் பகுப்பாய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தும் உரிய இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கையானது உற்பத்திச்சாலையில் அமைந்துள்ள மதுவரி நிலையத்திற்கு கிடைத்திருக்கவில்லை என உரிய கோவைகளைப் பரீட்சித்தபோது அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக உரிய உற்பத்திகளில் அடங்கியுள்ள மதுபான காரத்தின் அளவினைப் போல அவற்றின் மனித பாவனைக்கு பாதகமான அல்லது அங்கீகரிக்கப்படாத பொருட்கள் அடங்கி காணப்படுகின்றதா என்பது தொடர்பாக

மதுவரி உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்படவில்லை.

3.3.5.6 V.A.உற்பத்திச்சாலையினால் 2019 மார்ச், யூன், ஒக்தோபர் ஆகிய மாதங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட 17 மாதிரிகளுக்குரிய இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

3.3.5.7 டீ.சி.எஸ்.எல் புதிய குதம் தொடர்பாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பகுப்பாய்வு அறிக்கைகளின் பிரகாரம் பதிவேட்டில் குறிப்பிட்ட மதுபானத்தின் காரமும் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் அறிக்கையிடப்பட்டுள்ள மதுபானத்தின் காரமும் தொடர்பாக கவனத்திற்கு எடுத்துக் கொள்கையில் ஒவ்வொரு உற்பத்தி சம்பந்தமாக அறவிடப்பட வேண்டிய வட்டிப் பணமானது நிர்ணயிக்கப்பட்டவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 07 சந்தர்ப்பங்களில் அவ்வாறு அறவிடப்படாத வரிப் பணம் ரூபா 531,338 ஆகும்.

3.3.5.8 ரோயல் காஸ்க் உற்பத்திச் சாலையின் சக்கை உற்பத்தி சம்பந்தமான பகுப்பாய்வு அறிக்கைகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) சக்கை உற்பத்தி**

----------------------------

(i) கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் CS1801414 ஆம் இலக்க அறிக்கையின் பிரகாரம் சக்கை உற்பத்திச் சாலையில் மதுபானத்தின் காரத்தின் அளவு 11 சதவீதத்திற்கும் 11.5 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாக இருக்க வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தது. திணைக்களத்தினால் சமூக உற்பத்தி செய்வதற்காக உற்பத்திச்சாலைக் கம்பனியுடன் 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் சக்கை உற்பத்தியில் மதுபானத்தின் காரம் 15 சதவீதமாக இருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தமை பிரச்சினைக்குரிய விடயமாகும்.

(ii) சக்கை உற்பத்திகள் சம்பந்தமாக அரசாங்கத்தின் இரசாயனப் பகுப்பாய்வுக்கு மாதிரிகளை அனுப்புதலானது இரண்டு தவணைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் உற்பத்திச்சாலைக் கம்பனியால் நாளாந்தம் உற்பத்திகளுக்குரிய மாதிரியை தனியார் ஆய்வுகூடத்திற்கு அனுப்பி பகுப்பாய்வு அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அப்பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் பதிவேட்டில் குறிப்பிட்ட மதுபானத்தின் காரத்திற்கும் மாதிரிகளில் குறிப்பிட்ட காரத்திற்கும் இடையே வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. விபரம் பின்னிணைப்பு 04 இல் தரப்படுகின்றது.

(iii) 2020 யூன் 30 ஆந் திகதி பீப்பாய் இலக்கம் பீ-18 இலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகளின் பதிவேட்டின் பிரகாரம் மதுபானத்தின் காரம் 12.5(V/V) சதவீதமாக இருக்க வேண்டிய போதிலும், ஆய்வுகூட பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் 10.47(V/V) சதவீதம் எனக்குறிப்பிடப்பட்டிருந்தது. இது போத்தலில் அடைக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும் சுத்திகரிக்கப்பட்ட மதுபானம் 639.924 லீற்றர் போத்தலில் அடைக்கப்பட்டு ரூபா 593,931.6 தொகையான வரிப் பணம் திணைக்களத்தினால் அறவிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க நியம தரமான மதுபான உற்பத்தியை சந்தைக்கு வழங்குவது தொடர்பாக மதுவரி உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(iv) 2020 யூன் 30 ஆந் திகதி பீப்பாய் இலக்கம் பீ-24 இலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகளின் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் மதுபானங்களின் காரம் 11.80 (V/V) சதவீதமாக இருந்ததனால் போத்தலில் அடைத்தல் நிறுத்தப்பட்ட இந்த இருப்பு சம்பந்தமாக எடுக்கப்படுகின்ற மேலதிக நடவடிக்கைகள் என்ன என்பது கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) மேலே குறிப்பிட்டவாறு பகுப்பாய்வு அறிக்கைகளுக்குஇணங்க உற்பத்திகளின் ஏற்றுக்கொள்ளப்பட்ட காரம் தொடர்பாக குறிப்பிடத்தக்க அளவான முரண்கள் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக மதுவரி உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தியிருக்கவில்லை. சந்தைக்கு வழங்கப்பட்டுள்ள நியம தரம் அற்ற உற்பத்திகள் தொடர்பான கைத்தொழில் குற்றங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது என்பது பற்றியும் கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

(vi) பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக எடுக்கப்படுகின்ற மாதிரிகள் தொடர்பாக மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதி, பெற்றுக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களின் பெயர், வகையும் அளவும், பகுப்பாய்வினை முன்னிட்டு எடுத்துச் சென்ற உத்தியோகத்தரின் கையொப்பம், பெறுபேறு, மாதிரியை மீண்டும் ஒப்படைத்த திகதி என்பன தொடர்பான விபரத்தை உள்ளடக்கிய ஒரு

பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும், அதற்கிணங்க ஒரு பதிவேட்டினைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரைத்தெடுப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற எதீல் மதுபானங்களின் மதுபான சதவீதத்தை பல்வேறு சந்தர்ப்பங்களின் போது நிர்ணயிப்பதற்காக நியம தரமான உபகரணத் தொகுதி மதுவரி நிலையங்களில் இருத்தல் அத்தியாவசியமானதாக இருந்த போதிலும், ரோயல் காஸ்க் உற்பத்திச் சாலையில் அவ்வாறான உபகரணம் இருக்கவில்லை. அதற்கிணங்க மதுபானங்களின் காரத்தை பரீட்சித்தல் மதுவரி உத்தியோகத்தர்களின் பிரதான மேல்மட்ட உத்தியோகத்தர்களால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.3.6 பகிர்ந்தளித்தல்

------------------------

அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக மதுவரி கட்டளைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க ஸ்பிரிட் ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது அல்லது வடிசாலைகளிலிருந்து அல்லது குதங்களிலிருந்து ஸ்பிரிட்களை எடுத்துச் செல்லுகின்ற சந்தர்ப்பத்தின் போது மதுவரி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். இந்த அனுமதிப்பத்திரம் டீ-28 ஆக அறிமுகப்படுத்தப்படுகின்றது. வடிசாலையிலிருந்து அல்லது குதங்களிலிருந்தாயின் அனுமதிப்பத்திரமானது வடிசாலைக்குப் பொறுப்பான உத்தியோகத்தரினாலும் மாகாணம் அல்லது மாவட்டமாயின் அந்த அனுமதிப்பத்திரமானது மதுவரி அத்தியட்சகர் அல்லது உதவி மதுவரி ஆணையாளரினால் வழங்கப்படுகின்றது. ஸ்பிரிட் இறக்குமதி சம்பந்தமான அனுமதிப்பத்திரமானது மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படுகின்றது.

அவ்வாறே மதுவரி அனுமதிப்பத்திரத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற உற்பத்திச்சாலைகளிலிருந்து சில்லறை வியாபாரத்திற்காக சாராயம் மற்றும் போத்தல் கள்ளுகளை எடுத்துச் செல்லும் போது சீ.எஸ்.ரீ(1) அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் எடுத்துச் செல்லல் இடம்பெறுதல் வேண்டும். இதற்காக நாடு முழுவதிலுமுள்ள வியாபார நிறுவனங்களுக்காக பகிர்ந்தளித்தல் நடவடிக்கையை மேற்கொள்வதற்குரிய அனுமதிப்பத்திரமானது தலைமை அலுவலகத்தின் மூலம் வழங்கப்படுகின்றது.

ஸ்பிரிட் மற்றும் மதுபானங்களை எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தினை பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

3.3.6.1 போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிட்ட ஸ்பிரிட் பெறுவனவுகள் உண்மையாகப் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பது உறுதிப்படுத்தல் (டீ-33) பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாது ஒரு பகுதி பொருட்கள் வைக்கும் அறையில் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் மிகுதி மாத்திரம் ஏடுகளில் பதிவு செய்யப்பட்டதன்காரணமாக ஸ்பிரிட் அளவில் இணக்கமற்றிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. பொறுப்பான உத்தியோகத்தர் இதற்காக கவனம் செலுத்தியுள்ளார் என்பது அவதானிக்கப்படவில்லை. உதாரணம்: V.A டிஸ்டலரீஸ் கம்பனி (விபரம் பின்னிணைப்பு 06 இல் தரப்படுகின்றது)

3.3.6.2 2018 ஆம் ஆண்டின் போது 6 உற்பத்திச் சாலைகளுக்காக தலைமை அலுவலகத்தால் மதுபானங்களை எடுத்துச் செல்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட அடியிதழ் புத்தகங்களின் தகவல்கள் மற்றும் ஒவ்வொரு உற்பத்திச் சாலைகளின் வருடாந்த உற்பத்தியும் எடுத்துச் செல்லலும் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன. அத்தகவல்களுக்கிணங்க போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது திணைக்களத்தினால் உற்பத்திச்சாலையில் இடம்பெறுகின்ற உற்பத்தி தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்படவில்லை.

| **உற்பத்திச்சாலை** | **2018 ஆம் ஆண்டில் வரி அறவிடப்பட்ட உற்பத்தி** | **வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை (CST)** | **ஒரு தடவையில் எடுத்துச் செல்லக் கூடிய உச்ச அளவான இருப்பு** | **உற்பத்திப் பொருளை எடுத்துச் செல்வதற்காக தேவைப்படுகின்ற தவணைகளின் எண்ணிக்கை அண்ணளவாக** |
|---|---|---|---|---|
| | இருப்பு லீற்றர் | | இருப்பு லீற்றர் | |
| பெரிசில் | 1,492,113 | 363 | 3,403,506 | 01 |
| ரொக்லன்ட் | 5,080,856 | 69 | 246,486 | 21 |
| V.A.உற்பத்திச்சாலை | 1,286,289 | 56 | 286,680 | 05 |
| எக்மி | 2,838,011 | 65 | 328,000 | 09 |
| ஹிங்குரானை | 1,736,308 | 54 | 388,500 | 05 |
| ரோயல் காஸ்ட் | 313,149 | 06 | 23,370 | 14 |

(அ) மேற்கூறிய வித்தியாசங்களுக்கிணங்க அவதானிக்கப்பட்டதானது நிர்ணயிக்கப்பட்டவாறு வரி செலுத்தாது மதுபானங்களை எடுத்துச் செல்வதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளமையாகும். மேலும், போக்குவரத்து அனுமதிப் பத்திரத்தினை வழங்கும் போது ஒரு தடவைக்கு உச்ச அளவு இயலளவினைக் குறிப்பிட்டு அந்த அனுமதியை ஆண்டு முழுவதும் நடைமுறைப் படுத்தப்படுவதாகக் குறிப்பிட்டு இருந்தமையால் தவணைகளின் எண்ணிக்கையை அதிகரித்து எடுத்துச் செல்லும் போது மட்டுப்பாடுகளின்றி மதுபானங்களை எடுத்துச் செல்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) உற்பத்திச்சாலையின் உற்பத்தி இயலளவு தொடர்பாக ஆராய்ந்து பார்க்காது போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதனால் மதுபான உற்பத்தியாளர்களுக்கு ஊழல் மற்றும் மோசடிகள் செய்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதா என்ற ஐயப்பாட்டினை புறக்கணிக்க முடியாதிருந்தது. அவ்வாறே அதன்மூலம் சட்டவிரோத மதுபானங்களை எடுத்துச் செல்வதன் மூலம் அரசாங்க வருமானம் இழக்கப்படுவதற்கு வாய்ப்பு உள்ளது என்ற ஐயப்பாட்டினையும் கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதுள்ளது.

3.3.6.3 உற்பத்திச்சாலைக்காக ஸ்பிரிட்களைப் பெற்றுக் கொள்ளும் போது போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்ட ஸ்பிரிட்களின் அளவு உண்மையாகப் பெறப்பட்டது என உறுதிப்படுத்துவதற்காக டீ-33 பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு, அந்த ஸ்பிரிட்களின் மொத்த லீற்றர் அளவு, உடனடி மதுபானத்தின் லீற்றர் அளவு, காரம், பொருள் உள்ளடக்கம் ஆகிய விபரங்கள் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உதாரணம்: V.A.டிஸ்டிலரீஸ் கம்பனி

3.3.6.4 வடிசாலை மற்றும் உற்பத்திச் சாலைக்காக ஸ்பிரிட்களையும் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானங்களையும் எடுத்துச் செல்லும் போது வாயில் கதவு அனுமதிப்பத்திரங்களைப் பயன்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு பிரிவினால் வாயில் கதவு குறிப்புக்களை வைத்திருத்தல் இடம்பெற்றிருக்கவில்லை. இது உள்ளகக் கட்டுப்பாட்டின் பலவீனமாக அவதானிக்கப்பட்டது.

3.3.6.5 ரோல் காஸ்க் வடிசாயையின் சக்கை உற்பத்தி, போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களை (டீ-28) வழங்குதல், ஏடுகளி பதிவு செய்தல் (டீ-29) என்பன பின்வருமாறு அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க உற்பத்தி தொடர்பாக கவனித்துப் பார்க்காது போக்குவரத்து அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது எனவும் போக்குவரத்து

அனுமதிப்பத்திரங்களுடன் ஏடுகளில் வழங்கப்பட்டுள்ளது எனவும் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களுடன் ஏடுகளில் பதியப்பட்ட மீதிகள் இணங்கியிருக்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| ஆண்டு | சக்கை உற்பத்தி | போக்குவரத்து டீ-28 இன் பிரகாரம் | ஏடுகளில் பதிவு செய்தல் டீ-29 இன் பிரகாரம் |
|---|---|---|---|
| | இருப்பு லீற்றர் | இருப்பு லீற்றர் | இருப்பு லீற்றர் |
| 2018 | 860,800 | 863,300 | 855,800 |
| 2019 | 1,438,500 | 1,495,500 | 1,438,500 |

3.3.6.6 ஐ.டீ.எல் உற்பத்திச் சாலைக்காக 2019 ஏப்ரல் 23 ஆந் திகதிய D327420 ஆம் இலக்க போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தின் மூலம் ஸ்பிரிட் இருப்பு, 24,967.2 லீற்றர்இறக்குமதி செய்தலானது ஸ்பிரிட் இருப்பு பொறுப்பேற்கும் பதிவேட்டில் (டீ-33) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

3.3.6.7 ஐ.டீ.எல் உற்பத்திச்சாலைக்காக டீ-319261 ஆம் இலக்க அனுமதிப்பத்திரம் மற்றும் டீ-327396 ஆம் இலக்க அனுமதிப்பத்திரத்தின் மூலம் முறையே 24,305 லீற்றர் இருப்பு மற்றும் 24,500 லீற்றர் இருப்பு இறக்குமதி செய்தல் பீப்பாய்களில் பெறுவனவுகளாக டீ-8 பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

3.3.6.8 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஐ.டீ.எல் உற்பத்திச்சாலையில் உற்பத்திப் பொருட்களை எடுத்துச் செல்வதற்காக மதுபான அனுமதிப்பத்திரம் வழங்குதல் பின்வருமாறாகும்.

| ஆண்டு | உற்பத்தி | வழங்கப்பட்டுள்ள போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை | ஒரு தடவையின் போது உச்ச அளவான போக்குவரத்து |
|---|---|---|---|
| | சு.ம.லீற்றர் | | சு.ம.லீற்றர் |
| 2018 | 2,462,020 | 55 | 444,000 |
| 2019 | 2,367,220 | 46 | 325,000 |

மேற்கூறிய விடயங்களின் பிரகாரம் உற்பத்தியுடன் ஒப்பிட்டுப் பார்க்காது திணைக்களத்தினால் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது எனவும் இதன் மூலம் தவறான தொடர்புகள் ஏற்படுவதனை தவிர்க்க முடியாது என்பதனை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதுள்ளது.

**3.3.7 ஏடுகள் மற்றும் கணக்கு கூற்றுக்களைப் பேணுதல்**

--------------------------------------------------------------------------------------

மதுவரிக்கட்டளைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க வெளிப்படுத்தப்பட வேண்டியுள்ள அனைத்து உபநியதிச்சட்டங்களில் குறிப்பிட்ட ஒழுங்குபடுத்தல்களுக்கும் பிரமாணங்களுக்கும் மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு வடிசாலைகளின் மற்றும் உற்பத்திச்சாலைகளின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பேணுதல் வடிசாலைகளில் மற்றும் உற்பத்திச் சாலைகளில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள மதுவரி உத்தியோகத்தர்களின் பிரதான பொறுப்பாகும். அந்த உத்தியோகத்தர்களால் பல்வேறு செயற்பாடுகள் சம்பந்தமாக பேணப்படவேண்டிய புத்தகங்கள் உறுதிப்படுத்தக்கூடிய வகையில் அனைத்து கணக்குகளும் சரி பிழை பார்க்கப்பட வேண்டிய போதிலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

3.3.7.1 வடிசாலையில் ஒவ்வொரு பீப்பாய்க்குள்ளும் போடப்பட்ட ஸ்பிரிட் அல்லது வழங்கப்பட்ட ஸ்பிரிட் தொடர்பாகவும் பீப்பாய்களிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் (பெறுவனவுகளும் வழங்கல்களும்) பீப்பாய் பதிவேட்டில் (டீ-8) தனித்தனியாக சரியாகப் பதியப்பட வேண்டியதுடன் ஒவ்வொரு மாதத்தின் இறுதியில் அதன் மீதி, களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஸ்பிரிட் முதலியன தொடர்பாக வழங்கல் பதிவேட்டில் (டீ-9) உள்ளடக்கப்படுதல் வேண்டும். அப்பதிவேடுகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) டீ-9 பதிவேட்டில் ஏதாவது ஒரு மாதத்தின் இறுதி மீதியானது அடுத்தமாதத்தில் ஆரம்ப மீதியாக இருக்க வேண்டிய போதிலும், அதற்கிணங்க இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் பின்னிணைப்பு 07 இன் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க பதிவேடுகளிலிருந்து சரியான இருப்பு மீதிகளை வெளிப்படுத்துகின்றதா என்பது கணக்காய்வின் போது பிரச்சினைக்குரிய விடயமாகும்.

(ஆ) ஒரு பீப்பாய்களிலிருந்து ஏனைய பீப்பாய்க்கு ஸ்பிரிட்களை மாற்றும் போது ஸ்பிரிட்களை வழங்குதல் மற்றும் பீப்பாய்க்கு கிடைக்கின்ற ஸ்பிரிட்களின் அளவுக்குச் சமமாக இருக்க வேண்டிய போதிலும், (டீ-9) பதிவேடு இணங்கியிருக்காத சந்தர்ப்பம் பின்னிணைப்பு 08 இன்பிரகாரம் அவதானிக்கப்பட்டது. இதன் போது அவதானிக்கப்பட்ட வித்தியாசம் குறிப்பிடத்தக்க அளவானதாக இருப்பதனால் அதனை சேதாரமாகக் கருதமுடியாது எனவும் மேற்பார்வை உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தியிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

(இ) உற்பத்திச்சாலையில் சாராய உற்பத்திக்காக வழங்கப்பட்ட ஸ்பிரிட்களின் அளவுக்கும் ‘‘பெறுவனவுகள் (டீ-8) பதிவேட்டில் குறிப்பிடப்படுகின்ற அளவுக்குமிடையே மாத இறுதியில் அதன் மீதி (டீ-9) பதிவேட்டில் உள்ளடக்கப்படுகின்றது. அப்பதிவேட்டின் பிரகாரம் வழங்கப்பட்ட ஸ்பிரிட் மீதிக்கும் பெறுவனவு ஸ்பிரிட் மீதிக்குமிடையே குறிப்பிடத்தக்க அளவான வித்தியாசம் (விபரம் பின்னிணைப்பு - 09 இல் தரப்படுகின்றது) காணப்பட்டிருந்தும் அது தொடர்பாக மேற்பார்வை உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) டீ.சீ.எஸ்.எல் புதிய குதத்திற்காக ஸ்பிரிட்களை கொள்வனவு செய்தல் டீ-33 பதிவேடு டீ-8 பதிவேடு மற்றும் டீ-9 பதிவேட்டின் பிரகாரம் இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| **ஆண்டும் மாதமும்** | **டீ-8 பதிவேட்டின் பிரகாரம்** | **டீ-9 பதிவேட்டின் பிரகாரம்** | **டீ-33 பதிவேட்டின் பிரகாரம்** |
|---|---|---|---|
| | சு.ம.லீற்றர் | சு.ம.லீற்றர் | சு.ம.லீற்றர் |
| 2019 | | | |
| சனவரி | 325,515.20 | 384,999.4 | 366,054.3 |
| பெப்ரவரி | 285,674.9 | 322,546.2 | 323,886.8 |
| மார்ச் | 310,525.2 | 356,761.0 | 357,771.6 |
| ஏப்ரல் | 236,500.70 | 289,952.6 | 306,688.0 |

மேற்கூறிய அவதானிப்புக்களின் பிரகாரம் பேணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பாக மதுவரி உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்படாததுடன் அதற்கிணங்க மதுவரி

வருமானத்தை பாதுகாத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களின் ஈடுபாடு திருப்தியான மட்டத்தில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) டீ.சீ.எஸ்.எல் புதிய குதத்திற்குரிய டீ-8 பதிவேட்டின் பிரகாரம் பீப்பாய் இக்கம் 28 இல் 2019 சனவரி 24 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி சுத்திகரிக்கப்பட்ட மதுபானம் 8,497.3 லீற்றர்களாகக் காணப்பட்டதுடன் 2019 நவம்பர் 30 ஆந் திகதி வரையும் அப்பீப்பாய் தொடர்பாக எக்கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெற்றிருக்கவில்லை. 2019 திசெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து புதிய டீ-8 பதிவேடு பேணப்படுவதுடன் அத்திகதியில் உள்ளவாறாறு பீப்பாய் இலக்கம் 28 இன் மீதியாக சுத்திகரிக்கப்பட்ட மதுபானம் 5326.3 லீற்றராக பதியப்பட்டிருந்தது. அதற்கிணங்க சுத்திகரிக்கப்பட்ட மதுபானம் 3,171 லீற்றர் குறைவு கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக மதுவரி உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.3.8 களஞ்சியப்படுத்தல்

------------------------------

3.3.8.1 உற்பத்திச் சாலையில் காணப்பட்ட அளவு மற்றும் கிடைத்த ஸ்பிரிட்களின் அளவு சேதத்திற்கு இடமளித்ததன் பின்னர் சாராய உற்பத்திக்காக பயன்படுத்திய ஸ்பிரிட்களின் அளவு என்பவற்றை செம்மையாக்கியதன் பின்னர் கிடைத்த மீதிக்கும் வழங்கல் பதிவேட்டின் (டீ-9) பிரகாரம் காணப்பட்ட மீதிக்குமிடையே வித்தியாசம் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதற்கிணங்க வெளிப்படுத்தப்படுவதானது மதுவரி உத்தியோகத்தர்களால் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தேவையான மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதாகும். விபரம் பின்வருமாறாகும்.

| **உற்பத்திச்சாலை** | **காலப்பகுதி** | **இணக்கம் செய்யப்படாத பெறுமதி** |
|---|---|---|
| | | சு.ம.லீற்றர் |
| V.A டிஸ்டிலரீஸ் தனியார் கம்பனி | 2019 சனவரியிலிருந்து செப்தெம்பர் 30 வரை | 90,505.7 |
| | 2018 | 7,998.3 |
| ஹிங்குரான உற்பத்திச் சாலை | 2018 | 997.6 |

| | | |
|---|---|---|
| அக்மி உற்பத்திச்சாலை | 2018 | 2,045.7 |
| டீ.சீ.எஸ்.எல் பழைய குதம் | 2019 சனவரியிலிருந்து திசெம்பர் வரை | 353,319.0 |
| | 2020 பெப்ரவரி, மே | 455.0 |
| டீ.சீ.எஸ்.எல் புதிய குதம் | 2019 சனவரியிலிருந்து திசெம்பர் வரை | 48,355.0 |
| | 2020 மார்ச், யூன் | 12,995.8 |
| ரோயல் காஸ்க் டிஸ்டிலரீஸ் | 2019 சனவரியிலிருந்து திசெம்பர் வரை | 30,653.9 |
| | 2020 சனவரி, யூன் | 11,682.8 |
| ஐ.டீ.எல் உற்பத்திச்சாலை | 2019 மார்ச், திசெம்பர் | 8,176.6 |
| | 2020 சனவரி | 562.6 |

3.3.8.2 உற்பத்திச்சாலைக்காக ஸ்பிரிட் பெறுவனவுகள், போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிட்ட பெறுமதி,உள்ளபடியான மீதி என்பன தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டு டீ-33 பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டது. உற்பத்திச்சாலைக்காக ஸ்பிரிட் பெறுவனவுகள் பதிவுசெய்யப்பட்ட டீ-33 பதிவேட்டிற்கும் டீ-9 (வழங்கல்) பதிவேட்டிற்குமிடையே இணக்கமின்மைகள் காணப்பட்டன. (பின்னிணைப்பு - 10) இதற்கிணங்க மேற்பார்வை நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருந்த மதுவரி உத்தியோகத்தர்கள் நடவடிக்கை மேற்கொண்டார்களா என்பது சிக்கலுடையதாகும்.

3.3.8.3 V.A.உற்பத்திச்சாலைக்காக ஸ்பிரிட்களைப் பெற்றுக்கொள்ளும்போது பெரல் (Drum) பயன்படுத்தப்பட்டிருந்தது. உற்பத்திச்சாலைக்குள் பொருட்களை வைக்கும் அறை (Bond Room) காணப்பட்டிருந்தும் ஸ்பிரிட்கள் பொருட்களை வைக்கும் அறையினூடாக (Bond Room) அல்லாது நேரடியாக பீப்பாய்களுக்கு பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன என்பதனை உறுதிப்படுத்தும் பதிவேடான டீ-33 பதிவேட்டின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக உற்பத்திச் சாலைக்காக கிடைத்துள்ள ஸ்பிரட்கள் தொடர்பாக சரியான தரவுகள் உறுதிப்படுத்தும் டீ-33 பதிவேட்டிலிருந்து வெளிப்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக மதுவரி உத்தியோகத்தர்களால் போதியளவு மேற்பார்வை இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

3.3.8.4 2018 ஆம் ஆண்டில் மற்றும் 2019 ஒக்தோபர் 31 வரையான காலப்பகுதி தொடர்பாக V.A உற்பத்திச்சாலையிலுள்ள பொருட்கள் வைக்கும் அறையிலுள்ள (Bond Room) இருப்பு பதிவேட்டின் பிரகாரம் ஸ்பிரிட் பெறுவனவுகள் மற்றும் இருப்பு உறுதிப்படுத்தல்

பதிவேட்டின் (டீ-33) பிரகாரம் பெறுவனவுகளில் பின்வருமாறு வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

| ஆண்டு | | பொருள் வைக்கும் அறையின் இருப்பு பதிவேட்டின் பிரகாரம் ஸ்பிரிட் பெறுவனவுகள் | டீ-33 இன் பிரகாரம் ஸ்பிரிட் பெறுவனவுகள் | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| | | சு.ம.லீற்றர் | சு.ம.லீற்றர் | சு.ம.லீற்றர் |
| 2018 | | 413,807.02 | 431,123.3 | 17,316.28 |
| 2019 | ஒக்தோபர் 30 வரை | 367,331.25 | 445,932.8 | 78,601.55 |

அதற்கிணங்க இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள பொறுப்பான உத்தியோகத்தர்கள் இது தொடர்பாக கவனம் செலுத்தியுள்ளார்கள் என்பது அவதானிக்கப்படவில்லை.

3.3.8.5 V.Aஉற்பத்திச்சாலையால் பேணப்பட்டு வருகின்ற பீப்பாய்களுக்கு ஸ்பிரிட்களை வழங்குதலானது இருப்பு மெய்மையாய்வு (டீ-33) பதிவேடு மற்றும் பொருள் வைக்கும்அறையின் இருப்பு தொடர்பான அறிக்கையின் பிரகாரம் பின்வருமாறு வித்தியாசங்கள் காணப்பட்டன. அந்த அறிக்கையின் பிரகாரம் குறிப்பிடத்தக்க அவான வித்தியாசங்கள் காணப்பட்டமை தொடர்பாக மேற்பார்வை உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தியுள்ளார்கள் என்பது அவதானிக்கப்படவில்லை. அதற்கிணங்க சரியான மதுவரி வருமானம் சேகரிக்கப்பட்டுள்ளதா என்பது கணக்காய்வில் சிக்கலுக்குரியதாகும்.

| ஆண்டு | | பொருள் வைக்கும் அறையிலுள்ள அறிக்கையின் பிரகாரம் | டீ-33 இன் பிரகாரம் | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| | | சு.ம.லீற்றர் | சு.ம.லீற்றர் | சு.ம.லீற்றர் |
| 2018 | | 412,850.08 | 429,921.02 | 17,070.94 |
| 2019 | ஒக்தோபர் 30 வரை | 341,838.25 | 433,991.95 | 92,153.7 |

### 3.3.9 மேற்பார்வையும் திடீர் சுற்றிவளைப்புக்களும்

---

மதுவரி திணைக்களத்தின் கடமைகளின் கீழ் வடிசாலைகள், குதங்கள், மதுபான வடிசாலைகள் என்பவற்றினை நிருவகித்தலும் மேற்பார்வை செய்தலும் ஒரு பிரதான கடமையாகும். அதற்கிணங்க அதிகாரமுள்ள உத்தியோகத்தர்களின் முறையான நிருவாகத்திற்கு உற்பத்திச்சாலைகள் உட்பட்டதாகும். உதவி மதுவரி ஆணையாளர்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையும் மதுவரி அத்தியட்சகர்கள் ஒரு மாதத்திற்கு ஒரு தடவையும் உரிய உற்பத்திச்சாலையை முழுமையான பரிசீலனைக்கு உட்படுத்துதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஸ்பிரிட்கள் உற்பத்திச்சாலைக்கு கொண்டுவரப்படுகின்ற சந்தர்ப்பங்களிலும் உரிய உற்பத்திச்சாலையை பரிசீலனைக்கு உட்படுத்துதல் வேண்டும். அறிவித்தலில் குறிப்பிட்ட அனைத்து நிபந்தனைகளும் உற்பத்திச்சாலைக்குப் பொறுப்பான உத்தியோகத்தரால் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பது பொறுப்பு அவர்களின் தீவிர கவனத்திற்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். கணக்காய்வின் போது பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட வடிசாலைகள் மற்றும் உற்பத்திச் சாலைகள் சம்பந்தமாக மேற்பார்வை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆகக்குறைந்த எண்ணிக்கையான பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேற்பார்வை மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்ட இடங்களில் உற்பத்திச்சாலைகளால் பேணப்பட்டு வருகின்ற கணக்கேடுகளில் இணங்கியிருக்காமை, வெட்டப்பட்டிருந்தமை, டிப்பக்ஸ் செய்யப்பட்டு எண்ணிக்கைகள் மாற்றப்பட்டிருந்தமை ஆகிய சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதனால் முறையான மேற்பார்வை இடம்பெற்றுள்ளனவா என்பதுவும் சரியான மதுவரி வருமானம் சேகரிக்கப்பட்டுள்ளனவா என்பதுவும் கணக்காய்வின் போது சிக்கலுக்குரியதாகும்.

### 3.3.10 சட்ட விரோதமான போதைப் பொருட்கள் (மது) தொடர்பாக அறிக்கையிடுதல்

---

மதுவரி திணைக்களத்தினாலும் இலங்கை பொலிசினாலும் சட்டவிரோதமான போதைப் பொருட்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்கள் தொடர்பாக 2016 இலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான விபரம்பின்வருமாறாகும்.

| நிறுவனம் | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| இலங்கை மதுவரித் திணைக்களம் | 32,782 | 40,942 | 36,859 |
| இலங்கை பொலிசு | 120,105 | 120,198 | 129,813 |

மது மற்றும் புகையிலைக் கைத்தொழில்களில் சட்டரீதியற்ற உற்பத்திகளைத் தவிர்ப்பதனூடாக சமூக பாதுகாப்பினை வழங்குதல் மதுவரித் திணைக்களத்தின் செயற்பணியாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மேலே குறிப்பிட்ட சுற்றிவளைப்புக்கள் தொடர்பாகக் கவனித்துப் பார்க்கும் போது அச்செயற்பணிகள் நிறைவேற்றப்பட்டதா என்பது சச்சரவுக்கு உட்பட்டதாகும். சட்டவிரோத மது சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை அதிகரிப்பினைக் காணக்கூடியதாக இருப்பதனால் நாடளாவிய ரீதியில் சட்டவிரோத மதுபானங்கள் பொதுவாக அதிகரித்துச் செல்லல் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அதிகாரத்தைக் கொண்ட மதுவரித் திணைக்களத்தினால் இதற்கான செயலாற்றல் விளைதிறனாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது கணக்காய்வில் சச்சரவுக்கு உட்பட்ட விடயமாகும்.

## 3.4 உற்பத்தியினூடாக ஏற்படுகின்ற சமூக பொருளாதார தாக்கங்கள்

### 3.4.1 சுகாதார ரீதியான சிக்கல்கள்

புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை, உலக சுகாதார அமைப்பு (இலங்கை அலுவலகம்), இலங்கை மருத்துவ சங்கம் முதலிய நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களினால் இலங்கையின் புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பாக தேசிய மற்றும் சமூக ரீதியான நேரடிக் கிரயம் (2015 ஆம் ஆண்டு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் பிரகாரம்) 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 119.66 பில்லியன் எனவும் புகையிலை மற்றும் மதுபான பாவனையால் ஏற்படுகின்ற பக்க விளைவுகளுக்கான பரிகாரங்களை முன்னிட்டு ரூபா 90.03 பில்லியன் மறைமுக கிரயத்தை மேற்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது என்பதுவும் அவதானிக்கப்பட்டது. இக்கிரயத்தினைக் கணிக்கும் போது சட்டத்தை அமுல்படுத்தும் கிரயம், காப்புறுதிக் கிரயம், கட்டுப்படுத்தும் கிரயம், சுகாதார அமைச்சின் நிருவாகக் கிரயம் முதலிய கிரயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

அனைத்து வகையிலும் நோயாளி நிலைமை தொடர்பாக கவனித்துப் பார்க்கையில் தோன்றுகின்ற விடயமாவது மதுபானப் பாவனையால் இடம்பெறுகின்ற விபத்துக்கள் மற்றும் ஊனமடைதலினால் பொருளாதாரத்திற்கு செலவு செய்ய வேண்டி ஏற்படுகின்ற ஒட்டுமொத்த செலவு ரூபா 33,922.3 மில்லியனாகும். இது நாட்டின் சுகாதார பாதுகாப்பிற்கும் பொருளாதார முறைமைக்கும் பாரிய அளவில் தாக்கத்தினை ஏற்படுத்தும் 2015 ஆம் ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தியில் 1.95 சதவீதம் அதாவது ரூபா 209.03 பில்லியன் புகையிலை மற்றும் மதுபானங்களுக்கான

கூட்டிணைந்த கிரயத்தை பொருளாதாரத்தில் மேற்கொள்ள வேண்டியிருந்தது என மேலே மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது.

### 3.4.2 குடும்ப அமைப்புக்களில் சிக்கல்கள்

-----------------------------------------------------------

மேலே குறிப்பிட்ட ஆராய்ச்சியின் பிரகாரம் மதுபானம் சம்பந்தப்பட்டதான பாதகமான விளைவுகளாக இனங்காணப்பட்ட குடும்ப மோதல்களுக்காகவும் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்காகவும் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தது. இதற்காக அரசாங்கத்தினைப் போல பல அரசார்பற்ற தரப்பினர்களுக்கும் அதிக அளவான கிரயத்தினை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது. அதாவது காப்புறுதி உள்ளடக்கம், சட்டத்தை நிறைவேற்றும் கிரயம், அடக்குதல் கிரயம், சுகாதார அமைச்சின் நிருவாகக் கிரயம், புனர்வாழ்வழித்தல் கிரயம் முதலியவைகளாகும். மதுபானங்களைப் பயன்படுத்துவதன் காரணமாக தொழில்களின் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது எனவும் புகையிலை மற்றும் மதுபானங்கள் தொடர்பான தேசிய அதிகார சபை, உலக சுகாதார அமைப்பு (இலங்கை அலுவலகம்) இலங்கை மருத்துவ சங்கம் முதலிய நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களினால் இலங்கையின் புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய மற்றும் சமூக கிரயம் மீது 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது.

### 3.4.3 அரசாங்க வருமானம் மீதான தாக்கம்

---------------------------------------------------------------

அரசாங்கத்தினால் வரியைக் கணிப்பீடு செய்யும் போது மதுபானத்தை பயன்படுத்துவதனால் முறையற்ற விளைவுகளின் காரணமாக செலவு செய்ய வேண்டி ஏற்பட்ட மேலதிக (மறைமுக) கிரயம் (Phychosocial Costs impoverishment diseases and pre mature morality) தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்படவில்லை. அதன் காரணமாக நாட்டின் சுகாதார, சமூக மற்றும் நிதிக் கொள்கையைத் தயாரிக்கும் போது மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக செலவு செய்ய வேண்டி ஏற்படுகின்ற கிரயம் தொடர்பாக கவனம் செலுத்தப்படும் முக்கியத்துவம் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.4.4 சட்டவிரோத சுற்றாடல்

-------------------------------------

அரசியல் தாக்கங்கள் அல்லது ஏனைய கவனித்துப் பார்த்தல்கள் இன்றி தொடர்ச்சியாக அமுல்படுத்தப்படுகின்ற கடுமையான சட்டங்களை நிறைவேற்றுதல் மற்றும் சமூக தலையீட்டின் மூலம் சட்ட விரோதமான மதுபான உற்பத்தி மற்றும்

சந்தைப்படுத்தலை ஒழிப்பதற்காக சமூக தலைமைத்துவத்தை வழங்குகின்ற பிரதேச சமயத் தலைவர்களை உள்ளடக்கிய ஏனைய சமூக சேவையாளர்களுக்கு முறையான பாதுகாப்பினை வழங்குதல் வேண்டும். அவ்வாறே சட்டவிரோத மதுபானங்களை ஒழிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்ற நடவடிக்கைகளின் விளைதிறனை அளவீடு செய்வதற்காக ஒப்படைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை தொடர்பாக சட்டவிரோத மதுபானங்களின் புளக்கம், பயன்படுத்தலினைத் தடுத்தல் முதலிய விடயங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

### 3.4.5 சுற்றாடல் தாக்கம்

------------------------------

திணைக்களத்தினால் அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொண்ட 23 உற்பத்தியாளர்களுக்கு மத்தியில் கணக்காய்வின் போது அவதானத்திற்கு உள்ளாகிய 6 வடிசாலைகள் மற்றும் உற்பத்திசாலைகளால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக அந்த உற்பத்தி சாலைகளுக்களால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள போத்தல்களின் அளவுகளின் மொத்தம் 46,254,703 ஆக இருந்ததுடன் இப்போத்தல்களில் 90 சதவீதம் அளவானவை மீண்டும் பயன்படுத்துதல் இடம்பெறாது நேரடியாக சுற்றாடலுக்கு விடுவிக்கப்படுவதன் மூலம் பிரதான சுற்றாடல் சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிடலாம். அதற்காக பொருத்தமான நடைமுறை அல்லது தேவையான சட்ட ஏற்பாடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுதல் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு விரும்புகின்றேன். விபரம் கீழே தரப்படுகின்றது.

| **உற்பத்திச்சாலை** | **ஆண்டு** | **போத்தல்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| றொக்லேன்ட் | 2018 | 5,959,260 |
| ரோயல் காஸல் | 2019 | 2,791,379 |
| ரன்தெனிகல | 2019 | 656,986 |
| எக்மி | 2018 | 25,251,530 |
| | 2019 | |
| கிளசிக் | 2018 | 923,468 |
| | 2019 | |
| ஹிங்குரானை | 2018 | 10,672,080 |
| | 2019 | |

## 4. சிபார்சுகள்

-----------------

மேலே குறிப்பிட்ட அவதானிப்புக்கள் சம்பந்தமாக பின்வரும் சிபார்சுகளை அமுல்படுத்துவதற்கு கவனம் செலுத்துகின்றேன்.

I. 2019 யூன் 20 ஆந் திகதிய 2128/30 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட 4/2019 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் பிரகாரம் ஸ்டிகர் மற்றும் ஸடிகர் முகாமைத்துவ முறைமையை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இந்த ஸ்டிகர் முகாமைத்துவ முறைமையை அமுல்படுத்தும் காலத்தை மதுவரி அறிவித்தல் 03 இனால் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதனால் மேலும் நீடிக்கப்படாமை.

II. மதுவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பவற்றை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்துகின்ற கணனி தரவு முறைமையை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

III. ஸ்பிரிட் நிர்ணயிக்கப்பட்ட அளவினை விட மிகையாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்டிருந்தமை மதுவரி உத்தியோகத்தரின் கவனத்திற்கு உட்பட்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அவதானிப்பு நடைமுறையை முறைமைப்படுத்துவதற்காக துறைமுகத்தில் மற்றும் விமான நிலையத்தில் மதுவரித் திணைக்களத்தின் அலுவலகத்தை ஸ்தாபித்து தேவையான உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

IV. ஸ்பிரிட் பெறுவனவுகள் தொடர்பான தகவல்கள் போக்குவரத்து அனுமதிப் பத்திரத்திலிருந்து பீப்பாய்களில் இடுதல், உற்பத்திக்காக வழங்குதல், மதுபானனங்களை உற்பத்தி செய்தல், என்பன தொடர்பான நடைமுறையை கணனி முறைமைக்கு இணங்க மேற்கொள்ளுதலும் முழுமையான மேற்பார்வைக்கு உட்படுத்துதலும்.

V. உள்ளகக் கட்டுப்பாடு மிகவும் உயர்ந்த மட்டத்தில் உள்ள இரண்டு உற்பத்திச் சாலைகளிலிருந்து மதுவரி வருமானத்திற்கு 70 சதவீதம் மற்றும் 10 சதவீதம் வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட ஏனைய 4 நிறுவனங்களின் பங்களிப்பு 3.54 சதவீதத்திலிருந்து 0.36 சதவீதம் வரை

குறைந்த பெறுமதியைக் கொண்டிருப்பதற்கு அந்த நிறுவனங்களின் பலவீனமான உள்ளகக் கட்டுப்பாடு காரணமாக இருந்தது. அதனால் ஏனைய உற்பத்திச் சாலைகளுக்காகவும் ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

VI. மதுவரி அத்தியட்சகர் மற்றும்உதவி ஆணையாளரினால் பரிசீலனை செய்யப்பட வேண்டிய தடவைகளைப் பரிசீலனை செய்தல், திடீர் சுற்றி வளைப்புக்களை மேற்கொள்ளல், மற்றும் கணக்கேடுகள் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

VII. ஸ்பிரிட் பயன்படுத்துதலை மதுபான உற்பத்திக்காக ஈடுபடுத்துதல் தொடர்பாக கவனம் செலுத்துதல்.

VIII. ஒவ்வொரு உற்பத்திச்சாலையினால் கொள்வனவு செய்யப்படுகின்ற மற்றும் பயன்படுத்தப்படுகின்ற ஸ்பிரிட் இருப்புக்கள், உற்பத்திக்காக ஸ்பிரிட்களை ஈடுபடுத்துதல், மதுபான உற்பத்தி, மிகுதி இருப்புக்கள் என்பன தொடர்பான அறிக்கையை மாதாந்தம் தலைமை அலுவலகத்திற்கு கிடைக்கச் செய்தலும் அத்தரவுகள் தொடர்பாக பகுப்பாய்வினை மேற்கொண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அறிக்கையினை திறைசேரியின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

IX. ஸ்பிரிட் உற்பத்திக்காக கள்ளினை வழங்கும் போது தென்னங் காணிகளின் அளவின் பிரகாரம் ஒரு ஏக்கருக்கு இருக்க வேண்டிய ஏற்றுக்கொள்ளப்பட்ட தென்னை மரங்களின் எண்ணிக்கை தொடர்பாகவும் சீவுதல் செய்யப்படுகின்ற தென்னை மரங்களின் எண்ணிக்கை தொடர்பாகவும் கவனம் செலுத்துவதன் மூலம் கள்ளு எடுத்துச் செல்வதற்காக அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல், அதன்மூலம் செயற்கையான கள்ளு வழங்குதலைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

X. நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு தாமதமின்றி பகுப்பாய்வு அறிக்கையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

XI. அனைத்து வகையான மதுபானங்களையும் சந்தைப்படுத்துவதற்காக அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது பொதுமக்களின் சுகாதாரம்,

பாதுகாப்பு, பொதுமக்களின் அபிப்பிராயம் ஆகிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படைத்தன்மையாக புதிய நடைமுறையினைத் தயாரித்தல்.

XII. திணைக்கள கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்குதலும், கட்டளைகளை மீறுகின்ற சந்தர்ப்பங்களில் இணக்கப்பாட்டு கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தலும்.

XIII. குற்ற இலக்குகளை வழங்குதல் தொடர்பாக கவனம் செலுத்துதல்.

XIV. லேபல், மூடி, போத்தல் என்பவற்றை பயன்படுத்துதல் தொடர்பாக கவனம் செலுத்துதல் மற்றும் உற்பத்தியுடன் லேபல், மூடி, போத்தல் என்பவற்றை பயன்படுத்துதல் தொடர்பான இணக்கப்பாட்டினை பகுப்பாய்வு செய்தல்.

XV. திணைக்களத்திற்குள் ஆய்வுகூடத்தினைத் தோற்றுவித்து அதனூடாக பகுப்பாய்வு அறிக்கையினைப் பெற்றுக்கொள்ளுதலும் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தலும்.

XVI. அனைத்து உற்பத்திச் சாலைகள் / வடிசாலைகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மதுவரி அலுவலகத்தில் மதுவரி கட்டளை, கட்டளைச் சட்டம், சுற்றறிக்கைகள் மற்றும் திணைக்கள நிபுணத்துவ கட்டளைகளை உள்ளடக்கிய கோவைகளைப் பேணுவதற்கு ஏற்பாடு செய்தல், மற்றும் அக்கட்டளைச் சட்டம் மற்றும் கட்டணங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

XVII. மதுபானம் சம்பந்தமாக ஒரு தேசிய கொள்கையை உருவாக்குதல்.

XVIII. மதுவரி வருமானம் தொடர்பான கொள்கைத் தீர்மானத்தினை எடுக்கும் போது மதுபான பாவனை ஏற்படுத்துகின்ற பக்க விளைவுகளின் காரணமாக செலவு செய்ய வேண்டி ஏற்படுகின்ற நேரடி மற்றும் மறைமுக கிரயங்கள் தொடர்பாகவும் கவனம் எடுத்தல்.

XIX. காணப்படுகின்ற சட்ட விதிகளின் கீழ் அரசாங்க வருமானத்தை பாதுகாத்தல் வேண்டும்.

அரசாங்க வருமானத்தை பாதுகாப்பதற்காகவும் மதுபானத்தின் காரணமாக ஏற்படுகின்ற ஏனைய சமூகப் பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்வதற்காகவும் காணப்படுகின்ற சட்டங்களின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமைகள் தொடர்பாக உரிய நிறுவனங்களின் பதவியணியினர்களைப் போல மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களும் கவனம் செலுத்தியிருக்கவில்லை என இந்த அறிக்கையின் சில அவதானிப்புக்களிலிருந்து தெளிவாகின்றது. அவ்வாறே அச்செயற்பாடுகளை சிறப்பாக முறைமைப்படுத்துவதற்கு அறிமுகப்படுத்த வேண்டிய உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் தொடர்பாக பொறுப்பான தரப்பினர்கள் கவனம் செலுத்தியுள்ளார்கள் என்பதுவும் அவதானிக்கப்பட்வில்லை. நிலைமை அவ்வாறு இருந்தும் தெரிவு செய்யப்பட்ட அந்நிறுவனங்களில் சேவையில் ஈடுபடுவதற்கு உத்தியோகத்தர்கள் காட்டும் அதிக ஆர்வம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி அதற்குத் தேவையான உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஒப்பம்./டபிள்யூ. பி. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி


2021 சனவரி 21 ஆந் திகதி

பின்னிணைப்பு - 01

| அனுமதிப்பத்திரத்தின் தன்மை | 2008 இன் 902 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் பிரகாரம் | | 2015 இன் 983 ஆம் இலக்க மதுவரி அறிவித்தின் பிரகாரம் | | 2017 இன் 1004 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் பிரகாரம் | |
|---|---|---|---|---|---|---|
| | வருடாந்த அனுமதிப் பத்திரக் கட்டணம் | பிணை | வருடாந்த அனுமதிப் பத்திரக் கட்டணம் | பிணை | வருடாந்த அனுமதிப் பத்திரக் கட்டணம் | பிணை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| சாராயம், தானிய மதுபானம் மற்றும் வெளிநாட்டு மதுபானம் மொத்த விற்பனைக்காக பகிர்ந்தளித்தல் | 75,000 | 50,000 | 1,000,000 | 50,000 | 1,000,000 | 50,000 |
| மதுபானங்களுக்கான மொத்த வியாபார அனுமதிப்பத்திரம் | 375,000 | 50,000 | 1,000,000 | 50,000 | 1,000,000 | 50,000 |
| மதுபானங்களுக்கான சில்லறை அனுமதிப்பத்திரம் | | | | | | |
| மாநகர சபை பிரதேசம் | 225,000 | 25,000 | 600,000 | 25,000 | 600,000 | 25,000 |
| நகர சபை பிரதேசம் | 150,000 | 25,000 | 400,000 | 25,000 | 400,000 | 25,000 |
| ஏனைய பிரதேசம் | 125,000 | 25,000 | 300,000 | 25,000 | 300,000 | 25,000 |
| கம்பனிகளின் புரள்வு 72 பத்து இலட்சங்களை மிகைக்குமாயிருந்தால் | 300,000 | 25,000 | 1,000,000 | 25,000 | 1,000,000 | 25,000 |
| ஹோட்டல் அனுமதிப்பத்திரம் | | | | | | |
| 200 அறைகள் அல்லது அதற்கு மேல் | 300,000 | 5,000 | 1,000,000 | 25,000 | 500,000 | 25,000 |
| 20 அறைகளிலிருந்து 199 அறைகள் வரை | - | - | 500,000 | 25,000 | 250,000 | 25,000 |
| 20 அறைகளுக்கு குறைய | 100,000 | 5,000 | 300,000 | 25,000 | 100,000 | 25,000 |
| உணவு விடுதி அனுமதிப்பத்திரம் சுற்றுலா சபையின் அங்கீகாரத்துடன் | | | | | | |
| ஏ தரம் | 200,000 | 5,000 | 600,000 | 25,000 | 250,000 | 25,000 |
| பீ தரம் | 150,000 | 5,000 | 600,000 | 25,000 | 250,000 | 25,000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சீ தரம் | 100,000 | 5,000 | 600,000 | 25,000 | 250,000 | 25,000 |
| சுற்றுலா சபையின் அங்கீகாரமின்றி | 100,000 | 25,000 | 600,000 | 25,000 | 250,000 | 25,000 |
| உரிமையாளர் சமூக மண்டபம் | 300,000 | 25,000 | 800,000 | 25,000 | 500,000 | 25,000 |
| அங்கத்தவர்களுக்கு மாத்திரமான சமூக மண்டபம் | | | | | | |
| மாநகர சபை பிரதேசம் | 75,000 | 25,000 | 600,000 | 25,000 | 250,000 | 25,000 |
| நகர சபை பிரதேசம் | 50,000 | 25,000 | 600,000 | 25,000 | 250,000 | 25,000 |
| ஏனைய பிரதேசம் | 25,000 | 25,000 | 600,000 | 25,000 | 250,000 | 25,000 |
| திரைப்படங்களுக்கான பொழுதுபோக்கு தாழ்த்தப்பட்ட அனுமதிப்பத்திரம் | 75,000 | 25,000 | 300,000 | 25,000 | 50,000 | 25,000 |
| ---------------------------- | | | | | | |
| தோட்ட கென்டீன் கள்ளு | 10,000 | 10,000 | 100,000 | 25,000 | 25,000 | 25,000 |
| சாராயம் மற்றும் கள்ளு | 20,000 | 10,000 | 100,000 | 25,00 | 25,000 | 25,000 |
| புகையிரத உணவுச் சாலை | 25,000 | 25,000 | 50,000 | 25,000 | 25,000 | 25,000 |
| சந்தர்ப்ப அனுமதிப்பத்திரம் | 5,000 | - | 50,000 | - | 25,000 | - |

## பின்னிணைப்பு 02


மதுவரி ஆணையாளர் நாயகம்
மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம்(வருமான கொள்கை, நிர்வாகம்)(இ.நி.சே.)
மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகம்(வருமான நடவடிக்கை, சட்ட வலுப்படுத்தல்)திணைக்களம் சார்
பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்(இ.க.சே.)

பின்னிணைப்பு - 03

**மதுபான உற்பத்திக் கம்பனிகளிலிருந்து வருமானத்திற்கான பங்களிப்புக்கள்**

| உற்பத்திச் சாலை | 2018 ஆம் ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட காரம் | வருமானம் ரூபா.மில்லியன் | மொத்த வருமானத்தின் சதவீதம் |
|---|---|---|---|
| DCSL | 29,617,060.92 | 55,737 | 66.97 |
| Hingurana | 948,851.17 | 1,785 | 2.15 |
| IDL | 4,330,790.23 | 8,150 | 9.79 |
| Rockland Distrilleries | 3,103,825.76 | 5,841 | 7.02 |
| Nippon Expo | 226,159.65 | 425 | 0.51 |
| Periceyl Co. | 1,700,745.42 | 3,200 | 3.85 |
| Acme (PVT) Ltd. | 1,564,739.37 | 2,944 | 3.54 |
| W.M.Mendis | 995,905.99 | 1,874 | 2.25 |
| V.A.Distilleries | 722,488.30 | 1,359 | 1.63 |
| Scotland | 239,379.71 | 450 | 0.54 |
| Uva Glen | 221,461.76 | 416 | 0.50 |
| Randenigula | 123,781.32 | 232 | 0.28 |
| Royal Cask | 161,079.02 | 303 | 0.36 |
| Thikkam | 13,686.37 | 25 | 0.03 |
| Yalikamam | 43,973.69 | 82 | 0.10 |
| Waram | 14,588.03 | 27 | 0.03 |
| Manri Lanka | 56,418.80 | 106 | 0.13 |
| Classic | 58,059.25 | 109 | 0.13 |

பின்னிணைப்பு - 04

## பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகளை தாமதமாக இரசாயனப் பகுப்பாய்விற்கு அனுப்பி வைத்தல்

| வடிசாலை / உற்பத்திச்சாலை | மாதிரியை பெற்றுக் கொண்ட திகதி | இரசாயனப் பகுப்பாய்விற்கு அனுப்பிய திகதி |
|---|---|---|
| ரொக்லேண்ட் உற்பத்திச் சாலை | 2018 மார்ச் 07 இலிருந்து ஏப்ரல் 19 வரை | 2018.04.24 |
| தித்தபத்தர | 2019 யூன் 27 | 2018.07.10 |
| | 2019 யூலை 03 | 2019.07.23 |
| | 2019 யூலை 05 இலிருந்து 11 வரை | 2019.07.23 |
| | 2019 ஆகஸ்ட் | 2019.09.06 |
| அக்மி வடிசாலை | ML/1694/19 | 2019.09.17 |
| தும்மல சூரிய | 2019/07/19 | |
| | 2019/07/18 (11/2019, 12/2019, 13/2019) | 2019.09.17 |
| | DD/S/27/2019 (2019/05/10) | 2019.06.07 |
| | 2019/05/17 பெற்றுக் கொள்ளப்பட்ட 06 மாதிரிகள் | 2019.06.07 |
| | 2019.07.22 இலிருந்து 2019.10.03 வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட 23 மாதிரிகள் 2019.10.16 ஆந் திகதி வரையும் இரசாயனப் பகுப்பாய்விற்கு அனுப்பி வைக்கப்படவில்லை. | |

**பின்னிணைப்பு - 05**

லேபலில் குறிப்பிட்ட காரத்தின் அளவுக்கும் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கைகளில் குறிப்பிட்ட காரத்தின் அளவிற்குமிடையிலான வித்தியாசங்கள் அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள்

| **வடிசாலை / உற்பத்திச் சாலை** | **மாதிரி இலக்கம்** | **லேபலில் குறிப்பிட்ட காரம்** | **இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கையின் படி காரம்** |
|---|---|---|---|
| அக்மி வடிசாலை | ML/719/18 | 74 | 73.7 |
| | DD/S/03/2018 | 74 | 73.7 |
| | DD/S/02/2018 | 74 | 73.7 |
| | DD/S/27/2019 | 74 | 73.7 |
| | வழங்குனரின் அனுமதிப்பத்திர இலக்கம் | நாளாந்த பெறுவனவு பதிவேட்டின் பிரகாரம் | |
| | 24/19 | 7 | 7.1 |
| | 25/19, 26/19 | 7 | 7.3 |
| | 01/19 | 7.2 | 7.4 |
| | 29/19 | 7 | 7.3 |
| | 24/2019 | 7.1 | 6.8 |
| | 25/2019 | 7.1 | 7.3 |
| | 26/2019 | 7.1 | 6.8 |
| | 19/2018 | 7.1 | 6.8 |
| ரொக்லேன்ட் உற்பத்திச் சாலை தித்தபத்தர | ML/1886/18 | 33.5 | 33.1 |
| ரொக்லேன்ட் வடிசாலை | வழங்குனரின் பெயர் | | |
| மாரவில | G.S.W.K.திசாநாயக்க | 7.4 | 7.1 |
| | W.N.J.ரொட்ரிகோ | 7.5 | 8.1 |

| | | | |
|---|---|---|---|
| | K.P.A.A பெர்ணான்டோ | 7.5 | 8.4 |
| | விமலசேன மாரசிங்ஹ | 7.5 | 8.3 |
| | W.A.N.பெர்ணான்டோ | 7.5 | 5.9 |
| | W.N.J.ரொட்ரிகோ | 6.6 | 5.3 |
| | ரொக்லேண்ட் டிஸ்டிலரீஸ் கம்பனி | 6.5 | 7 |
| | ரொக்லேண்ட் டிஸ்டிலரீஸ் கம்பனி | 6.5 | 8.1 |
| | W.A.N.பெர்ணான்டோ | 7 | 6.6 |
| ஹிங்குரான டிஸ்டிலரீஸ் | அதிவிசேட சாராயம் | 33.5 | 33.8 |
| தித்தபததா | விசேட சாராயம் | 30.5 | 30.8 |
| | ரெட் சாராயம் | 27.5 | 27.8 |
| ரொக்லேண்ட் | RD/T/01/2018 | 17% நீர் அடங்கியிருத்தல் | |
| வடிசாலை மாரவில | RD/T/02/2018 | அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து அமிலம் காணப்படல். | |
| | RD/T/30/2017 | அங்கீகரித்த எல்லையை மிகைத்து அமிலம் காணப்படல் | |
| | RD/T/34/2017 | அங்கீகரித்த எல்லையை மிகைத்து அமிலம் காணப்படல் | |
| ஐ.டீ.எல் | L/1083/2019 | 37.7 | 37.3 |
| | L/1086/2019 | 40 | 39.4 |
| | L/1088/2019 | 40 | 39.6 |
| | L/1091/2019 | 40 | 39.4 |
| | L/6706-6728/19 | 37.7 | 37.2 |
| | L/6706-6728/19 | 37.7 | 36.9 |
| | L/6516-6534/19 | 28 | 28.3 |
| | L/6516-6534/19 | 37.7 | 37 |
| | L/6516-6534/19 | 40 | 40.3 |
| | L/6516-6534/19 | 40 | 39.5 |
| | L/2960-2971/19 | 40 | 40.4 |

| | | | |
|---|---|---|---|
| | L/2960-2971/19 | 33.5 | 33.8 |
| | L/4508-4516/19 | 40 | 40.3 |
| | L/1304/19 | 37.7 | 38.1 |
| | L/1306/2019 | 30 | 29.7 |
| | L/2321-2341/20 | 40 | 40.5 |
| | L/2321-2341/20 | 40 | 40.6 |
| | L/2321-2341/20 | 40 | 40.4 |
| ரோயல் காஸ்க் டிஸ்டிலரீஸ் | ML 538 | 12.5 | 11.4 |
| | ML 537 | 12.5 | 11.4 |
| | ML 89 | 27.5 | 27.8 |
| | ML/2008 | 12.5 | 11.2 |
| | ML 1789 | 30.5 | 29.9 |
| | ML 1790 | 30.5 | 29.9 |
| | ML 1791 | 30.5 | 29.7 |
| | ML 1792 | 30.5 | 29.7 |
| | ML 1793 | 33.5 | 32.7 |
| | ML/890 | 12.5 | 11.3 |
| | ML 887 | 30.5 | 30.0 |
| | ML 889 | 30.5 | 29.9 |
| | ML 209/19 | 30.5 | 30.1 |
| | ML 210/19 | 30.5 | 30.1 |
| | ML 2744/18 | 30.5 | 30.1 |
| டி.சீ.எஸ்.எல் புதிய குதம் | 429 | 33.5 | 33.8 |
| | 430 | 33.5 | 33.8 |
| | 431 | 33.5 | 33.8 |
| | 432 | 33.5 | 33.9 |
| | 433 | 33.5 | 33.9 |
| | 1776 | 33.5 | 33.8 |

| | | | |
|---|---|---|---|
| | 1546/18 | 27.5 | 28.2 |
| | 1548/18 | 33.5 | 33.8 |
| | 1549/18 | 33.5 | 33.8 |
| | 1550/18 | 33.5 | 33.9 |
| | 1551/18 | 27.5 | 28.0 |
| | 1552/18 | 33.5 | 33.8 |
| | 1553/18 | 33.5 | 33.9 |
| | 1554/18 | 33.5 | 33.8 |
| ரோயல் காஸ்க் வடிசாலை | 1535/18 | 33.5 | 33.8 |
| | ML 435 | 96.1 | 96.3 |
| | ML 436 | 96.2 | 94.8 |

## போக்குவரத்து அனுமதிப்பத்திரம் மற்றும் டீ-33 பதிவேட்டுடன் இணங்கியிருக்காத சந்தர்ப்பம்

| போக்குவரத்து அனுமதிப்பத்திர இலக்கம் | போக்குவரத்து அனுமதிப்பத்திரத்திலுள்ள தகவல்களின் பிரகாரம் | | | | டீ-33 பதிவேட்டின் பிரகாரம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த லீற்றர் | காரம் | சுத்திகரிக் மதுபானம் | கப்பட்ட லீற்றர் | மொத்த லீற்றர் | காரம் | சுத்திகரிக் மதுபானம் | கப்பட்ட லீற்றர் |
| D273026 2/25 | 5000 | 96.1 | | 4805.0 | 2502.8 | 96.2 | | 2407.7 |
| D273026 2/26 | 5000 | 96.1 | | 4805.0 | 2000.0 | 96.2 | | 1924.0 |
| D273029 2/28 | 5000 | 96.1 | | 4805.0 | 10000.0 | 96.1 | | 9610.0 |
| D273031 3/05 | 5000 | 96.1 | | 4805.0 | 2498.6 | 96.1 | | 2401.2 |
| D273042 4/05 | 3750 | 96.2 | | 3607.5 | 4998.0 | 96.1 | | 4803.1 |
| D273056 5/22 | 10000 | 96.1 | | 9610.0 | 1502.8 | 96.1 | | 1444.2 |
| D273070 7/31 | 10000 | 96.1 | | 9610.0 | 4999.0 | 96.1 | | 4804.0 |
| D273071 8/09 | 10000 | 96.1 | | 9610.0 | 3750.4 | 96.1 | | 3604.1 |
| D273072 8/13 | 10000 | 96.1 | | 9610.0 | 4250.4 | 96.1 | | 4084.6 |
| D273082 8/18 | 10000 | 96.2 | | 9620.0 | 999.0 | 96.2 | | 961.0 |
| D273083 9/19 | 8750 | 96.2 | | 8417.5 | 3999.0 | 96.2 | | 3847.0 |
| D273089 10/04 | 10000 | 96.2 | | 9620.0 | 3996.8 | 96.2 | | 3844.9 |
| D273090 10/09 | 10000 | 96.2 | | 9620.0 | 2502.9 | 96.2 | | 2407.8 |
| D273097 10/30 | 10000 | 96.2 | | 9620.0 | 2498.0 | 96.2 | | 2403 |

**பின்னிணைப்பு - 07**

**ஏதாவது ஒரு மாத இறுதியிலுள்ள மீதி அடுத்துவரும் மாதத்தின் ஆரம்ப மீதியுடன் இணங்கியிருக்காமை**

| உற்பத்திச்சாலை / வடிசாலை | ஆண்டு மற்றும் மாதம் | | சரியான ஆரம்ப மீதி | பதியப்பட்டுள்ள மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|---|---|
| | | | மொத்த லீற்றர் | மொத்த லீற்றர் | மொத்த லீற்றர் |
| அக்மி வடிசாலை | 2019 | மே | 64,225.7 | 67,227.7 | 3002.0 |
| | | யூன் | 64,365.5 | 61,365.5 | 3000.0 |
| ரொக்லேன்ட் வடிசாலை | 2018 | ஏப்ரல் | 144,801.6 | 139,763.8 | 5037.8 |
| | | மே | 164,522.8 | 130,472.3 | 34050.5 |
| | | யூன் | 143,184.0 | 144,125.0 | 541.0 |
| | | யூலை | 146,025.8 | 130,344.2 | 15676.0 |
| | | ஆகஸ்ட் | 122,746.4 | 123,685.8 | 939.4 |
| | | | சு.ம.லீற்றர் | சு.ம.லீற்றர் | சு.ம.லீற்றர் |
| ஹிங்குரான வடிசாலை | 2018 | | 268,872.7 | 250,538.1 | 18334.6 |
| | 2019 | | 285,645.2 | 283,200.3 | 2444.9 |
| | 2019 | செப்தெம்பர் | 370,764.8 | 317,127.1 | 53637.79 |
| V.A.டிஸ்டிலரீஸ் | 2017 | மே | 71,069.1 | 69,286.8 | 1782.3 |
| தனியார் கம்பனி | 2019 | பெப்ரவரி | 132,343.10 | 129,429.4 | 2913.7 |
| ரோயல் காஸ்க் டிஸ்டிலரீஸ் | 2017 | திசெம்பர் | 2158.4 | 1197.4 | 961.0 |
| | 2018 | சனவரி | 1850.2 | 1480.4 | 369.8 |
| | 2018 | செப்தெம்பர் | 7815.6 | 7509.0 | 306.6 |
| | 2019 | நவம்பர | 19907.9 | 7555.6 | 12,352.3 |

பின்னிணைப்பு - 08

**பீப்பாய்களுக்கிடையே ஸ்பிரிட்களை மாற்றஞ் செய்யும் வழமைக்கு மாற்றமான சந்தர்ப்பங்கள்**

| உற்பத்திச் சாலை | ஆண்டு மாதம் | மாற்றம் செய்வதற்காக வழங்கப்பட்ட ஸ்பிரிட் | கிடைத்த ஸ்பிரிட்களின் அளவு | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| | | சு.ம.லீற்றர் | சு.ம.லீற்றர் | சு.ம.லீற்றர் |
| அக்மி உற்பத்திச்சாலை | 2018 சனவரி | 122,791.9 | 102,254.7 | 20537.2 |
| | பெப்ரவரி | 94,323.9 | 99,327.1 | 5003.2 |
| | மார்ச் | 133,389.3 | 127,761.1 | 5628.2 |
| | ஏப்ரல் | 136,096.2 | 155,111.6 | 19015.4 |
| | 2019 சனவரி | 119,111.3 | 126,955.6 | 7844.3 |
| | ஏப்ரல் | 121,683.6 | 140,923.6 | 19240.0 |
| | ஆகஸ்ட் | 90,037.6 | 109,355.3 | 19317.7 |
| ஹிங்குரான உற்பத்திச் சாலை | 2017 மார்ச் | 55,457.6 | 59,864.3 | 4406.7 |
| | ஏப்ரல் | 46,613.3 | 46,655.3 | 42.0 |
| | நவம்பர் | 28,366.9 | 30,580.1 | 2213.2 |
| | 2018 ஏப்ரல் | 14,412.4 | 13,992.3 | 420.1 |
| | யூன் | 13,835.6 | 12,740.6 | 1095.0 |
| V.A.டிஸ்டிலரீஸ் தனியார் கம்பனி | 2019 சனவரி | 79,204.4 | 93,418.2 | 14213.8 |
| | பெப்ரவரி | 26,671.5 | 25,232.10 | 1439.4 |
| | மார்ச் | 33,291.8 | 30,080.10 | 3211.7 |
| | மே | 29,360.6 | 27,659.90 | 1700.7 |
| | யூன் | 51,749.10 | 51,636.20 | 112.9 |
| | யூலை | 42,550.10 | 39,983.80 | 2566.3 |
| ரோயல் காஸ்க் டிஸ்டிலரீஸ் | 2018 சனவரி | 480.5 | 580.3 | 99.8 |
| | ஏப்ரல் | 12,124.9 | 21,554.8 | 9,429.9 |

| | | | |
|---|---|---|---|
| யூலை | 12,230.6 | 11,510.4 | 720.2 |
| ஆகஸ்ட் | 14,883.1 | 15,189.7 | 306.6 |
| நவம்பர் | 16,113.6 | 14,062.3 | 2,050.7 |
| திசெம்பர் | 8,763.9 | 13,806.2 | 5,042.3 |
| 2019 யூலை | 7,890.3 | 19,738.9 | 11,848.6 |

**பின்னிணைப்பு - 09**

**உற்பத்திச்சாலைக்காக கிடைத்த மற்றும் உற்பத்திக்காக வழங்கப்பட்ட ஸ்பிரிட் தொடர்பாக டீ-8 மற்றும் டீ-9 பதிவேடுகளுக்கிடையிலான இணக்கமின்மைகள்**

| **உற்பத்திச்சாலை** | **ஆண்டு மாதம்** | | **டீ-8 பதிவேட்டின் பிரகாரம்** | **டீ-9 பதிவேட்டின் பிரகாரம்** | **வித்தியாசம்** |
|---|---|---|---|---|---|
| | | | சு.ம.லீற்றர் | சு.ம.லீற்றர் | சு.ம.லீற்றர் |
| ஹிங்குரானை உற்பத்திச் சாலை | 2018 | யூன் | 25,400.0 | 26,495.3 | 2018 |
| | | ஆகஸ்ட் | 74,741.0 | 79,551.0 | |
| | | செப்தெம்பர் | 42,831.5 | 42,731.5 | |
| | 2019 | சனவரி | 38,597.4 | 35,528.0 | 2019 |
| வழங்குதல் | | | | | |
| | 2018 | சனவரி | 42,927.3 | 817.2 | |
| | | ஏப்ரல் | 50,048.3 | 418.4 | |
| | | ஆகஸ்ட் | 47,095.5 | 47,895.5 | 800.0 |
| | | செப்தெம்பர் | 45,123.4 | 45,118.3 | 5.1 |
| | | திசெம்பர் | 49,123.4 | 48,101.0 | 1758.4 |
| | 2019 | சனவரி | 49,859.4 | 45,911.5 | 3069.4 |
| | | | ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரகாரம் லீற்றர் | ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரகாரம் லீற்றர் | ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரகாரம் லீற்றர் |
| எக்மி வடிசாலை | 2019 | பெப்ரவரி | 14,051.11 | 13,051.1 | 1000.01 |
| V.A.டிஸ்டிலரீஸ் தனியார் கம்பனி | | | சுத்திகரிக்கப் பட்ட மதுபானம் லீற்றர் | சுத்திகரிக்கப் பட்ட மதுபானம் லீற்றர் | சுத்திகரிக்கப் பட்ட மதுபானம் லீற்றர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2018 | சனவரி | 56,950.9 | 57,050.7 | 99.8 |
| | | ஏப்ரல் | 111,354.8 | 112,303.1 | 948.3 |
| | 2019 | சனவரி | 75,916.4 | 76,809.6 | 893.2 |
| | | பெப்ரவரி | 131,331.4 | 129,437.4 | 1,902.0 |
| | | மார்ச் | 142,424.7 | 136,437.6 | 5,987.1 |
| | | ஏப்ரல் | 120,913.4 | 116,352.2 | 4,561.2 |
| | | மே | 110,587.7 | 111,338.1 | 750.4 |
| | | யூன் | 163,355.5 | 164,147.5 | 792.0 |
| | | ஆகஸ்ட் | 103,809.2 | 104,599.3 | 790.1 |
| | | செப்தெம்பர் | 103,017.9 | 103,776.3 | 758.4 |
| ரோயல் காஸ்க் டிஸ்டிலரீஸ் | 2019 | யூலை | 20,718 | 37,566 | |
| | | திசெம்பர் | 19,036.3 | 10,570.9 | |
| ஐ.டீ.எல் | 2019 ஸ்பிரிட் பெறுவனவு | சனவரி | - | 193,076.0 | 193,076.0 |
| | | பெப்ரவரி | - | 24,140.0 | 24,140.0 |
| | | மார்ச் | 130,703.6 | 214,338.7 | 83,635.1 |
| | | ஏப்ரல் | 302,430.3 | 326,471.3 | 24,041.0 |
| | 2019 ஸ்பிரிட் வழங்குதல் | சனவரி | 196,340.5 | 209,000.7 | 12,660.2 |
| | | மார்ச் | 276,090.1 | 288,476.1 | 12,386.0 |
| | | ஏப்ரல் | 179,514.5 | 202,290.7 | 22,776.2 |
| D.C.S.L பழைய குதம் | 2020 வழங்குதல் | சனவரி | 227,626.8 | 271,322.4 | 43,695.6 |
| | | பெப்ரவரி | 217,533.0 | 260,358.0 | 42,825.0 |

| | | | |
|---|---|---|---|
| மார்ச் | 107,885.2 | 116,671.6 | 8,792.4 |
| மே | 155,962.0 | 164,033.4 | 8,071.4 |

**பின்னிணைப்பு - 10**

**டீ-33 மற்றும் டீ-9 பதிவேட்டின் பிரகாரம் ஸ்பிரிட் பெறுவனவு இணங்கியிருக்காத சந்தர்ப்பம்**

| உற்பத்திச்சாலை | ஆண்டு மற்றும் மாதம் | | டீ-33 இன் பிரகாரம் | டீ-9 இன் பிரகாரம் | வித்தியாசம் |
|---|---|---|---|---|---|
| | | | சுத்திகரிக்கப்பட்ட மதுபானம் லீற்றர் | சுத்திகரிக்கப்பட்ட மதுபானம் லீற்றர் | சுத்திகரிக்கப்பட்ட மதுபானம் லீற்றர் |
| ஹிங்குரானை உற்பத்திச்சாலை | 2018 | சனவரி | 30,882.2 | 32,479.5 | 1599.3 |
| | | பெப்ரவரி | 41,516.0 | 43,246.0 | 1730.0 |
| | | ஏப்ரல் | 90,635.50 | 94,264.5 | 3629.0 |
| | | மே | 22,828.70 | 28,588.7 | 5760.0 |
| | | யூன் | 25,400.9 | 26,495.3 | 1094.4 |
| | | ஆகஸ்ட் | 78,441.0 | 79,551.0 | 1110.0 |
| | 2017 | மார்ச் | 50,579.6 | 46,128.0 | 4451.6 |
| | | ஒக்தோபர் | 42,646.9 | 44,811.6 | 2164.7 |
| V.A.டிஸ்டிலரீஸ் தனியார் கம்பனி | 2019 | சனவரி | 92,282.95 | 78,072.8 | 14,210.15 |
| | | பெப்ரவரி | 34,359.35 | 34,123.3 | 236.05 |
| | | மார்ச் | 21,612.1 | 24,834.6 | 13,222.5 |
| | | மே | 92,300.8 | 94,016.4 | 1,715.6 |
| | | ஆகஸ்ட் | 37,222.8 | 40,842.8 | 3,620.0 |
| I.D.L | 2019 | மார்ச் | 214,388.3 | 214,338.3 | 50 |
| | | யூன் | 59935.7 | 59,952.7 | 17 |
| | | செப்தெம்பர் | 118,143.7 | 118,288.6 | 1449 |
| | | ஒக்தோபர் | 297,448.1 | 298,456.2 | 1008.1 |
| | | திசெம்பர் | 233,905.6 | 233,870.6 | 35 |